பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 22 புதன்கிழமை (06-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:101

# வவுனியாவில் 'பாஸ்' முறை முற்றாக நீக்கம்!

வவுனியா,மார்ச்6

வவுனியாவில் கடந்த சுமார் பதினொரு ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்துவந்த வதிவிட அனுமதிப் பத்திரமுறை உடனடியாக நீக்கப்பட்டிருக்கிறது.

வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூ.மகாநாயக்கா நேற்று இதனை அறிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கமைய பொலீஸ் தலைமையகத்தில் இருந்து விடுக்கப்பட்ட பணிப்பை அடுத்தே வவுனியாவில் இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களின் நடமாட்டம் மற்றும் தங்குமிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு - ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் முதன்முதலில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அதன்பின் அந்த ஆட்சியிலும், அடுத்துவந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் பொதுமக்கள் மீதான இந்தக் கெடுபிடிகள் படிப்படியாக இறுக்கப்பட்டுவந்தன.

ஒருகட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் வசிப்போரும், வெளியிடங்களில் இருந்து அங்கு வருவோரும், வெளியேறுவோரும் சுமார் 21வகையான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்க வேண்டி இருந்தது. இந்த அனுமதிப்பத்திரங்களை (பாஸ்) விநியோகிப்பதற்காகப் பல லட்சம் ரூபா செலவில் 21இடங்களில் அதற்கான நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

வவுனியாவில் வசிப்போர் நிரந்தர 'பாஸ்' அனுமதி பெற்றிருக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது.

தென்னிலங்கையில் இருந்தும் - வவுனியா தவிர்ந்த வன்னியின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் - வவுனியா மாவட்டத்திற்கு வருவோர் 'பாஸ்' என்ற பெயரில் பல்வேறு பாதுகாப்புக் கெடுபிடிகளையும் சந்திக்க நேர்ந்தது. இதனால் ஆயிரக் கணக்கானோர் நலன்புரி நிலையங்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்பாளர்களின் முதற் குழு இன்று வன்னிக்கு!

## மரியாதையின் நிமித்தம் பிரபாவையும் சந்திப்பர்

கொழும்பு,மார்ச்6

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவுள்ள சர்வதேச கண்காணிப்பாளர்களின் முதல் அணி இன்று வன்னிக்குப் பயணமாகின்றது. இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை மரியாதையின் நிமித்தம் சந்திப்பார்கள்.**

கண்காணிப்புக்குழுவினர் இன்று கொழும்பிலிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் மல்லாவியைச் சென்றடைவர்.

வெளிநாட்டுக் கண்காணிப்புக்குழுவின் தலைவர், உறுப்பினர் ஒருவர் மற்றும் நோர்வே தூதரக அதிகாரிகள் இக் குழுவில் இடம்பெறுவர்.

இவர்களை மல்லாவியில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்பார்.

குழுவினர் விடுதலைப் புலிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் மனு விசாரணைக்கு ஏற்பு!

கொழும்பு,மார்ச்6

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டை ரத்துச் செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுமீதான விசாரணை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

நேற்று இந்த மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுள்ளது.

இதேவேளை -

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு எதிராக சிஹல உறுமய தாக்கல் செய்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஒத்திவைப்பு; எதிர்க்கட்சி கண்டனம்

கொழும்பு,மார்ச்6

இருபத்தொரு உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலை ஒத்திவைக்க அரசு எடுத்துள்ள முடிவுக்கு எதிர்க்கட்சி கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்ற எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்ப்புத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மங்கள சமரவீர அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். (ஐ-6)

## பாக்.உதைபந்தாட்ட அணி யாழ்.வந்து விளையாடுமா?

கொழும்பு,மார்ச்6

இம்மாத நடுப்பகுதியில் இலங்கையில் நடைபெறவிருக்கும் பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஓர் ஆட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

'சமாதானத்துக்கான உதைபந்தாட்டம்' என்னும் தலைப்பில் இந்த ஆட்டத்தை குடாநாட்டில் நடத்த இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டு அமைச்சும் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் அணி இலங்கை அணியுடன் விளையாடவிருக்கும் ஆட்டங்களில் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த வசதியாக போட்டி தொடர்பான கால அட்டவணையில் திருத்தம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இரண்டு தரப்பும் இதற்கு இணங்கும் பட்சத்தில் இந்த ஆட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு பாதுகாப்பு அனுமதி தேவையில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்6

தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இனிமேல் குடாநாட்டு மக்கள் பாதுகாப்பு அனுமதி பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் நேற்று விடுத்த விசேட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டு மக்கள் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று இதுவரை இருந்து வந்த நடைமுறை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

எனவே புதிதாகத் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் குடாநாட்டு மக்கள் தமது விண்ணப்பப்படிவங்களை ரெலிகொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலகத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம். ஏனைய தேவைகளுக்கும் அவர்களுடனேயே தொடர்பு கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இன்று 3 விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்6

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் விமானப்படை விமானத்தின் உதவியுடன் இன்றும் மூன்று சேவைகள் நடத்தப்படவுள்ளன என்று 'ஹெலிரூர்ஸ்' நிறுவன யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

நேற்றுப் பயணம் செய்வதற்காக 2ஆம், 3ஆம், 4ஆம் சேவைகளுக்கு பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று சமுகம் அளிக்கும்படியும் -

இன்று பயணம் செய்வதற்காக பயணச்சீட்டுப் பெற்றவர்களை நாளை சமுகம் அளிக்கும்படியும் -

அவர் கேட்டுள்ளார்.

நாளைக்கும் அதன் பின்னரும் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுகளைப் பெற்றவர்களுக்கான பயணத் திகதி பற்றிய விவரம் பின்னர் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)


## கைத்தொழில் அமைச்சர் வருகிறார்

யாழப்பாணம்,மார்ச்6

கைத்தொழில் அமைச்சர் ரோஹித போகொல்லாகம எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

குடாநாட்டில் கைத்தொழில் நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல், புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் ஆகியன தொடர்பாக அமைச்சர் ஆராயவுள்ளார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் இவர் இங்கு விஜயம் மேற்கொள்கிறார். (ஐ-3)



நோர்வே தூதரகம் நோக்கி நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட பிக்குகளில் சிலர்.

## நோர்வே தூதரகம் முன் பிக்குகள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,மார்ச்6

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் நோர்வே அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைக் கண்டித்து கொழும்பில் நேற்று பிக்குகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

தேசிய பிக்குகள் முன்னணி இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தது.

விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பித்த இந்தப் பேரணி ஊர்வலமாக நோர்வே தூதரகத்தைச் சென்றடைந்தது. பின்னர் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் நோர்வே அரசு தலையிடுகின்றது எனக் குறிப்பிடும் மகஜர் ஒன்று நோர்வே தூதரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்குமார் நோர்வேக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான பிக்குமார் இந்தப் பேரணியில் பங்கு கொள்வர் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் சுமார் ஐந்நூறு பிக்குகள் மட்டுமே ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர். (ஐ-7)

## வடக்கின் அபிவிருத்திக்கு இரண்டு புதிய வங்கிகள்!

கொழும்பு,மார்ச்6

வடக்கின் அபிவிருத்திக்காக 'யாழ்ப்பாணம் அபிவிருத்தி வங்கி', 'வன்னி அபிவிருத்தி வங்கி' என்று இரு வங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான யோசனையை மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் ஏ.எஸ். ஜெயவர்த்தனா புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த வங்கிகளை அமைப்பதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் தமது அமைச்சு வழங்கும் என்று அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

இந்த வங்கிகள் அமைக்கப்படுமாயின் கடந்த 20வருடங்களாக அபிவிருத்தியில் பின்தங்கியிருக்கும் வடக்கின் பொருளாதாரம், வர்த்தகம் ஆகியன வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நடமாடும் வங்கிச் சேவையை நடத்துவது பற்றி இவர்கள் ஏற்கனவே பேச்சு நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடக்குக்கான 'பட்ஜெட்' நிதியை புனர்வாழ்வு அமைச்சே கையாளும்!

கொழும்பு,மார்ச்6

இந்த வருடம்முதல் வடபகுதிக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியைக் கையாளும் பொறுப்பு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சே வடக்குக்கான வரவு - செலவுத் திட்ட நிதியைக் கையாண்டு வந்தது.

இனிவருங்காலங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, அவற்றின் மேற்பார்வை என்பன புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையில் -

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 35 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் திட்டங்கள் பற்றிய யோசனைகளைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா வடக்கில் உள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று மாவட்டச் செயலாளர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-7)



சாவகச்சேரி சந்தையை மீள ஆரம்பித்து வைத்த நிகழ்வில் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மக்களின் மீள்குடியேற்ற பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையுடன் உரையாடுகின்றார். (ஐ)

# கண்காணிப்புக் குழுவில் அரசுத் தரப்பில் முஸ்லிம்களும்

கொழும்பு,மார்ச்6

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கென அமைக்கப்படவிருக்கும் குழுவில் அரசின் சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான கண்காணிப்புக் குழுக்களில் தலா ஒருவர் வீதம் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் இடம்பெறுவர் என்று கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதிநிதியாக காத்தான்குடியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார் எனக் கூறப்பட்டது.

கண்காணிப்புக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டுமென கட்சியின் பிரதிநிதிகள் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியமை தெரிந்ததே. (ஐ-7)

## மாங்குளம் உபதபாலகம் தபாலகமாகத் தரமுயர்வு

கொழும்பு,மார்ச்6

ஐம்பது வருடங்கள் பழைமை வாய்ந்த மாங்குளம் உபதபாலகம் தபாலகமாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது.

வன்னி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் இந்தத் தபாலகம் தரமுயர்த்தப்பட்டது. தபாலகத்தில் நிலவும் ஆளணி, உபகரண பற்றாக்குறைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (ஐ)

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பொருளியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'பொருளாதாரக் கொள்கைகளும் வளர்ச்சியும் அபிவிருத்தியும்' என்னும் தலைப்பில் பொருளியற்றுறை தலைவர் வி.பி.சிவநாதன் உரையாற்றுவார்.

## கொழும்புத்துறை இந்து மைதானம் பாவனைக்கு அனுமதி

அரியாலை,மார்ச்6

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் மீண்டும் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து பாடசாலை மாணவர்கள் மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் இந்த மைதானத்தில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (க-17)

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம்,மார்ச்6

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் ஏற்பாட்டிலான திருவள்ளுவர் விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி கோ.அம்பலவாணர் தலைமையில் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகனும் பங்குபற்றுவர்.

'வள்ளுவம்' சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும். (ஐ-3)



சாவகச்சேரி சந்தை மீள ஆரம்பித்தல் நிகழ்வில் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வியாபார நிலையங்களை நேரில் பார்வையிட்டு அவற்றை மீள புனரமைத்து ஆரம்பிப்பது தொடர்பாக வர்த்தக சங்கத் தலைவருடன் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம். (ஐ)

# ஜப்பானிய தூதரகத்தின் அதிகாரிகள் வருகின்றனர்

இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் கே.சேயாமா, இரண்டாவது செயலாளர் எம்.ஒய்காபா ஆகியோர் ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

அன்று யாழ்.செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் அவர்கள் கலந்துகொள்வார்கள். பின்னர் யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.போதனா வைத்தியசாலை, தாதியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றைப் பார்வையிடவுள்ளனர்.

பின்னர் அன்று மாலையே அவர் கொழும்பு திரும்புவார்கள். (ஐ-8)

# மகா சிவராத்திரி விழாவுக்கு திருக்கேதீஸ்வரத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்6

வரலாற்றுச் சிறப்புமிக்கதும், தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் ஒன்றுமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு கும்பபூசை, அபிஷேகம் என்பன இடம்பெற்றுத் தொடர்ந்து பிரதோஷப் பூசை நடைபெறும். இரவு 8 மணிக்கு முதலாம் சாமப்பூசையும், 10:30 மணிக்கு இரண்டாம் சாமப்பூசையும், நள்ளிரவு 12.15 மணிக்கு மூன்றாம் சாமப் பூசையும் மறுநாள் அதிகாலை 3 மணிக்கு நான்காம் சாமப்பூசையும் தொடர்ந்து காலை 6 மணிக்கு பாலாவி புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடலும் இடம்பெறும்.

பன்னிரு திருமுறைப் பண்ணிசை, திருக்கேதீஸ்வரத் திருப்பதிகம், சமயச் சொற்பொழிவு, மேளவாத்தியக் கச்சேரி என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். திருமுறைப் பண்ணிசையிலும், சமயச்சொற்பொழிவிலும் தென்னிந்தியாவின் புகழ்பூத்த சமயப் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மகா சிவராத்தி நிகழ்ச்சிகள் அனைத்தும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் ஒலி,ஒளிபரப்புச் சேவைகளிலும் நேரடி ஒலி ஒளிபரப்புச் செய்யப்படும்.

வேறு மாவட்டங்களில் இருந்து ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி அன்னதானம், தாகசாந்தி வசதிகளும் ஆலயத்தின் திருப்பணிச் சபையினரால் செய்யப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளதால் அபிஷேகங்கள், அர்ச்சனைகள் பாலாவிப் பிள்ளையார் ஆலயத்திலும நடைபெறும். (ஐ-7)

## சிப்பாய்க்கு பிணை

சுன்னாகம்,மார்ச்6

மல்லாகம் பகுதியில் 13வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவு முயற்சிக்குள்ளாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சிப்பாயை 15ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல மல்லாகம் நீதிவான் அனுமதித்தார்.

குறிப்பிட்ட சிப்பாய் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரைப் பிணையில் அனுமதித்த நீதிவான் அடுத்த மாதம் 2ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு உத்தரவிட்டார். (ஐ-3-29)

## நீதிமன்ற ஆவணசாலை எரிந்து நாசம்!

கொழும்பு,மார்ச்6

அவிசாவளை நீதிமன்றத் தீ வைப்புச் சம்பவம் தொடர்பாக இரண்டு பொலீஸார் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர். இச்சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற பொழுது இவ்விரு பொலீஸாரும் அங்கு கடமையில் இருந்திருக்கின்றனர்.

நீதிமன்றக் கட்டடத்தில் இருக்கும் ஆவணங்கள் அறை தீயினால் முற்றாக எரிந்திருக்கிறது. சுமார் 40 ஆயிரம் வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் நாசமாகியிருக்கின்றன.

நீதிமன்றக் காவலாளிகளுக்கு மேலதிகமாக பொலீஸாரும் கூட அங்கு காவல்கடமையில் இருந்தனர். இவர்களையும் மீறியே ஒரு குழுவினர் தீ வைப்பில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவிசாவளை தலைமையகப் பொலீஸ் நிலைய விளக்கமறியல் சாலைக்கு குண்டு வீசப்பட்டதில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த பாதாள உலகக் கோஷ்டி தலைவர்களில் ஒருவரான செல்வராஜா என்பவர் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பான வழக்கு ஆவணங்களை அழிக்கும் நோக்கிலேயே தீ வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால், அந்த வழக்கு ஆவணங்களுக்குத் தீயினால் எந்த சேதமும் ஏற்படவில்லை என்று பொலீஸார் கூறுகின்றனர். (ஐ)

# நல்லூரில் இம்மாத இறுதியில் ஆன்மீகப் பெருவிழா நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்6

இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் 5 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக சர்வதேச இந்துமத குருபீட யாழ். மாவட்ட அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் ஆன்மீகப் பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் இவ்விழாவிற்கு தலைமைவகிப்பார்.

இவ்விழாவில் சிவாச்சாரியர்கள், சமயப் பிரமுகர்கள், நாதஸ்வர - தவில் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள், சமூகப் பிரமுகர்கள் உட்பட 50 போ பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரதமவிருந்தினர்களாக பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி.விஸ்வநாதக் குருக்கள், சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள், இந்துக் குருமார் ஒன்றிய குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள், பிரதிஷ்டா கிரியா கலாமணி மு.பரமசாமிக்குருக்கள், மஹாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்கள், தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோரும் -

விஷேட விருந்தினர்களாக இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இவ்விழாவில் சர்வதேச இந்து மத குருபீடம், அகில இலங்கை சபரி மலை ஸ்ரீ சாஸ்தாபீடம் இணைந்து நடத்திய சமய - இலக்கிய அறிவுப் போட்டியில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (ஐ-8)

# இலங்கையில் முதலீடு செய்ய லித்துவேனியா விருப்பம்!

கொழும்பு,மார்ச்6

லித்துவேனியக் குடியரசு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இதற்காக அந்த நாட்டின் வர்த்தகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்திருக்கின்றது.

நாட்டில் தற்போது போர் ஓய்ந்து சமாதான முயற்சிகளுடன் கூடிய அமைதியான சூழ்நிலை காணப்படுகின்றது. இந்த நிலைமையைச் சாதகமாகக் கொண்டு ஆடை உற்பத்தி, உல்லாசப் பயணம், கல்வித்துறை என்பவற்றில் முதலீடுகள் மேற்கொள்ளத் தாங்கள் தயாராகி வருவதாக வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை -

நாட்டின் தற்போதைய நிலைமையினால் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு மேலும் பல நாடுகள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (க-4-6-ரி)

## வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்6

இளவாலை - கிராயடி வீதியை புனரமைப்பு செய்ய சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்தவாரம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த வீதித் திருத்தம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. அதைபடுத்தே மேற்படி வீதியை மானிப்பாய் பிரதேச சபை பண்டத்தரிப்பு உப அலுவலகத்தால் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-185)

### மாநகரசபை பொன்விழாவுக்காக

# மேயர் தலைமையிலான குழு யாழ். நகரில் நிதி சேகரிப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொன்விழாவை முன்னிட்டு நேற்றைய தினம் மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் யாழ்நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர்களிடம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுப் பகல் நகரப் பகுதிக்கு வருகைதந்த முதல்வரும், உறுப்பினர்களும் வர்த்தக நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கான நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது நேற்று மட்டும் சுமார் 75ஆயிரம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டதாக முதல்வர் செ.கந்தையன் தெரிவித்தார். நிதி சேகரிப்புப் பணி தொடர்ந்து இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

பொன்விழாக் கொண்டாட்டங்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# வீரப்பனின் மனைவி கைது!

இந்தியாவில் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியையும் அவரது உறவினர்கள் 6 பேரையும் கர்நாடக சிறப்பு அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முத்துலட்சுமியின் தந்தை ஐயப்பன் பூசாரி, தம்பி கோபாலன், உறவினரான பச்சயமூர்த்தி, பச்சைமடு, ராஜாமாறன், முத்துகுமாரு ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 27லட்சம் ரூபா ரொக்கப்பணம், வெடி மருந்து பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

# உதைபந்தாட்டப் போட்டியில் மோதல்!

ஆர்ஜென்ரீனாவில் நேற்று உதைபந்தாட்டப் போட்டியொன்றின் போது; இரு அணிகளினதும் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலிலும், அதனைக் கட்டுப்படுத்த முயன்ற பொலீஸாருடன் நிகழ்ந்த கைகலப்பிலும், 3பேர் உயிரிழந்தனர்.

பொலீஸார் மற்றும் பொதுமக்கள் தரப்பில் நூற்றுக்கணக்கானவர்கள் இந்த மோதலில் காயமடைந்தனர்.

# மத்தியகிழக்கு வன்முறைகளை தீர்க்க கடாபி சமரசத் திட்டம்

ஜெருசலேம்,மார்ச்6

மத்திய கிழக்கில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் தொடர்ந்துவரும் வன்முறைகளுக்கு முடிவுகட்டுவதற்கான சமரசத் திட்டம் ஒன்றை லிபிய அதிபர் கடாபி முன்வைத்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள அதிபர் கடாபி அங்கிருந்தவாறே இந்த சமரசத் திட்டம் குறித்து அறிவித்தார்.

பலஸ்தீன அகதிகள் அனைவரையும் பலஸ்தீன அதிகாரசபையிடம் ஒப்படைத்தல் -

ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கும் பேரழிவைத் தரத்தக்க ஆயுதங்களை இப்பிராந்தியத்தில் இருந்து இல்லாதொழித்தல் -

ஐநாவின் ஏற்பாட்டில் பலஸ்தீனத்தில் சுதந்திரமாகத் தேர்தல்களை நடத்துதல் - ஆகிய கோரிக்கைகளை இஸ்ரேல் நிறைவேற்றினால் அந்த நாட்டை அங்கீகரிப்பதற்கு அரபுநாடுகள் தயாராகவுள்ளன - என்றும் அதிபர் கடாபி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் இராணுவ ஹெலி ஆப்கானில் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## அதில் பயணித்த 7 பேர் இறந்தனர்

காபூல், மார்ச்6

அமெரிக்க இராணுவக் ஹெலிகொப்டர் ஒன்று ஆப்கானிஸ்தானில்



சுடப்பட்ட 'சினூக்' ரக ஹெலிகளில் ஒன்று

நேற்றுமுன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 7 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர். அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இதனை அறிவித்தார்.

கிழக்கு ஆப்கானின் கார்டஷ் நகரில் உள்ள தலிபான் மற்றும் அல் கெய்டாவினரின் நிலைகள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த ஹெலி கொப்டர்களில் ஒன்று உள்ளூர் நேரப்படி இரவு 10.30மணிக்கு சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்த ஹெலியில் இருந்த அமெரிக்கப் படையினரில் 6பேர் இதில் உயிரிழந்தனர்; 10 பேர் காயமடைந்தனர்.

சுடப்பட்ட ஹெலி அருகேவந்த மற்றொரு ஹெலியுடன் மோதி வீழ்ந்தது. இதனால் மற்றைய ஹெலியில் இருந்த அமெரிக்கப் படை வீரர் உயிரிழந்தார். ஆனால் அந்த ஹெலி சேதங்களுடன் தளத்திற்குத் திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஆப்கான் போராளிகள் மறைந்துள்ள மலைப் பகுதியில் குண்டுவெடிப்பினால் எழுந்த புகைமண்டலம்



ஆப்கானில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அங்கு போராளிகளால் அமெரிக்க வான்கலம் ஒன்று தாக்கி வீழ்த்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இருளைச் சாதகமாக்கிக் கொண்டு ஆப்கான் போராளிகள் ஹெலியைச் சுட்டு வீழ்த்தியதாகவும் -

வீழ்ந்த ஹெலி மீது தொடர்ந்து அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன. ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், தமது இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்ததாக அமெரிக்கா எண்ணி வந்தபோது, இடம்பெற்ற இந்தச் சம்பவம் தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளின் உக்கிரமான பதிலடியை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் இனிமேல் எதிர்கொள்ளவிருப்பதைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ-6-ரி)

# இஸ்ரேலிய டாங்கித் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 6 பேர் பலி!

ஜெருசலேம்,மார்ச்6

மேற்குக்கரை நகரான ரமழாவில் இஸ்ரேலியப் படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு நேற்றுமுன்தினம் குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர்.

'ஹமாஸ்' இயக்கத்தைச் சேர்ந்த ஹுசைன் அபு குவாக் என்ற தீவிரவாதியைக் கொல்ல இஸ்ரேலியப் படை மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையிலேயே இந்த 6 பலஸ்தீனர்களும் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

ஹுசைனின் காரை இஸ்ரேலிய டாங்கிகள் சுட்டு தகர்த்ததாகவும் -

அப்போது காரில் ஹுசைன் பயணிக்காததால் அவர் தப்பிவிட்டதாகவும் -

ஆனால் காரில் பயணித்த ஹுசைனின் மனைவி, 13 மற்றும் 14 வயதான மகள்கள் 10வயது மகன் ஆகியோர் இதில் இறந்ததாகவும் -

ரமழா நகரவாசிகள் கூறினர்.


இதேவேளை, ஹுசைனின் காருக்கு அருகே சென்ற காரும் இத்தாக்குதலில் சேதமடைந்ததால் அதிலிருந்த இரு பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் பயணித்த வேறொருகாரை நோக்கியே தமது டாங்கிகள் சுட்டதாகவும் -

ஆனால் ஹுசைனின் கார் எதிர்பாராத விதமாகத் தாக்குதலுக்கு இலக்கானதாகவும்-

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. இதற்கு அது மன்னிப்பும் கோரியுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் ஆன்மீகத் தலைவர் ஷேக் அஹமட் ஹுசைன் இத்தாக்குதலை 'யூதர்களின் கொடூரம்' என்று கண்டித்துள்ளார். (ஒ-ரி)



டாங்கித் தாக்குதலில் சின்னாபின்னமான கார்

# இஸ்ரேலிய நகரங்களில் பலஸ்தீனர்கள் தற்கொலைத்தாக்கு; துப்பாக்கிச் சூடு!

டெல்அவிவ்,மார்ச்6

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவின் கேளிக்கை விடுதி ஒன்றில் நேற்று பலஸ்தீனத் தீவிரவாதி ஒருவர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர்; 25பேர் வரை காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய நபர் பின்னர் இஸ்ரேலியப் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வீதி ஓரத்தில் உள்ள கேளிக்கை விடுதியொன்றின் ஜன்னல் வழியாக கைக்குண்டுகளை வீசிய பலஸ்தீனர் ஒருவர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதாக இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வடக்கு இஸ்ரேலின் அவுலா நகரில் பஸ் ஒன்றுக்குள் தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கவைத்து பலஸ்தீனர் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 5பேர் காயமடைந்தனர்.

மேற்குக்கரை பலஸ்தீன நகர்களான ஹெப்ரோன் மற்றும் பியூராவில் இஸ்ரேலியப் படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பலஸ்தீனப் பொலீஸார் ஒருவர் உயிரிழந்ததுடன், 10பேர் காயமடைந்தனர். (ஒ)

# பொதுநலவாய நாடுகளின் மாநாடு நேற்று முடிந்தது

பயங்கரவாதத்தை ஒன்றுபட்டு எதிர்ப்பது என்ற பிரகடனத்துடன் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நேற்று முடிவடைந்தது.

51 நாடுகளின் தலைவர்கள் ஆஸ்திரேலியாவின் கூலம் நகரில் கடந்த 4நாள்களாகக் கூடி இந்த மாநாட்டை நடத்தினர்.

பயங்கரவாதம் எந்த வடிவத்தில் இருந்தாலும் அதற்கு எதிராக முழுவீச்சில் ஒன்றிணைந்து சர்வதேச ரீதியாக செயற்படுவதென்று பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

சிம்பாப்வே அதிபர் ரொபேர்ட் முகாபேயின் ஜனநாயகவிரோத நடவடிக்கைகளை கண்டிக்கும் வகையில் அந்த நாட்டை அமைப்பிலிருந்து விலக்குவது என்று மாநாட்டின் முடிவில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதற்கு ஆபிரிக்க நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்பிட்டதையடுத்து அந்த எண்ணத்தை மாநாடு கைவிட்டது.

பிரிட்டனின் காலனித்துவத்தில் இருந்த நாடுகளே பொதுநலவாய நாடுகளாகக் கருதப்படுகின்றன.

## ரஷ்யா - சீனா கூட்டுமுயற்சி

மொஸ்கோ,மார்ச்6

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிப்பதற்காக ரஷ்யாவும் சீனாவும் கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ரஷ்ய வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் அலெஸாண்டர் லோஸ்யுகோவ் தெரிவித்தார். ஆனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் விவரம் குறித்து அவர் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நல்லுறவு, நீடித்தால்தான் தெற்காசியாவில் அமைதி நிலவும் என்றும் அவர் சொன்னார். (ம)

# மூச்சுத் திணற வைத்துக் கொல்லும் 'தெர்மோபாரிக்' குண்டுகளை ஆப்கானில் வீசும் அமெரிக்கா!

வாஷிங்ரன்,மார்ச்6

மலைக் குகைகளுக்குள் பதுங்கியிருப்பவர்களைத் தாக்கி மூச்சுத் திணறலை ஏற்படுத்திக் கொல்லும் சக்திவாய்ந்த 'தெர்மோபாரிக்' ரக குண்டுகளை அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் மீண்டும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

சுமார் 800 கிலோகிராம் எடையுள்ள இந்த ரகக் குண்டு அண்மையிலேயே தயாரிக்கப்பட்டது.

வீழ்ந்து வெடிக்கும் இடத்தில் உயர் அழுத்தத்தை ஏற்படுத்தி அப்பகுதியில் ஒட்சிசனை வெளியேற்றும் வகையில் இந்தக் குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய குண்டுகளைப் பயன்படுத்த மனித உரிமை அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளபோதிலும் அதனைப் பொருட்படுத்தாத அமெரிக்கா வி.எம்.யு.- 138 என்று குறிப்பிடப்படும் 'தெர்மோபாரிக்' குண்டுகளை ஆப்கான் போரில் உபயோகிக்கத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ)



வியட்நாம் போரின்போது அந்த நாட்டின் மீது அமெரிக்க விமானங்கள் வீசிய இரசாயனக் குண்டுகளால் ஏற்பட்ட பாதிப்புக்களால் இன்றும் அங்கு பிறக்கும் குழந்தைகள் அங்கக் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. அத்தகைய குழந்தைகளை பராமரிக்கும் நிலையம் ஒன்றில் எடுக்கப்பட்ட படம் இது.

# ஐ.நாவின் 190ஆவது நாடாக இணையும் சுவிற்ஸர்லாந்து!

சுவிற்ஸர்லாந்து நாடு ஐ.நாவில் சேர்வதற்கு முடிவுசெய்துள்ளது. இது குறித்து மக்களிடம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் தமது நாட்டை ஐ.நாவில் சேர்த்துக்கொள்வதற்கான ஆதரவை அந்நாட்டு மக்கள் வழங்கியுள்ளனர்.

சுவிற்ஸர்லாந்து மக்களின் இந்த முடிவை ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் வரவேற்றுள்ளார். ஐ.நா.பேரவைத் தலைவர் ஹங்கோ சூங்கும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இன்னும் சில வாரங்களில் சுவிற்ஸர்லாந்து உத்தியோகபூர்வமாக ஐ.நாவில் இணைந்துகொள்ளும் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. ஐ.நாவில் 190ஆவது உறுப்பு நாடாக அது இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஐ.நாவின் பணிகளுக்கு மதிப்புமிக்க அனுபவத்தையும் தொழில்நுட்ப அறிவையும் சுவிற்ஸர்லாந்து கொண்டுவரும்" - என்று கோபி அனான் தெரிவித்தார். (ம)

இப்பிரசாரத்திற்கு ஆதரவு வழங்குவோர் ஜப்பானிய மக்கள்




## நம் குழந்தைகளுக்குச் சிறந்த சிறுபராயம்

சமாதானம் தரும் சுதந்திரத்தை நமது குழந்தைகள் கடந்த 18 வருடங்களாகக் கண்டதே இல்லை. நாம் வாழ்ந்தது போல அவர்கள், பயமும் வன்முறைகளும் அற்ற ஒரு சூழலில் வாழவே இல்லை. இதுவரை சுமார் 9 இலட்சம் சிறுவர்கள் யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 3 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து பாதுகாப்பற்றவர்களாக வாழ்கின்றனர். சமாதானம் மலர்ந்தால், வேடிக்கையும் விளையாட்டும் நிறைந்த சிறுபராயம் நம் பிள்ளைகளின் வாழ்விலும் மலரும். அதை அவர்கள் நிச்சயம் அனுபவித்து அகம் மகிழ்வார்கள். இறுதியில் இப்போது, இன, மத ரீதியான தடைகளைத் தாண்டி ஒரே தேசத்தவர்களாக ஒன்று படுகின்றோம். ஒன்று பட்டே நிரந்தரத் தீர்வைக் காண ஓயாது நாம் உழைப்போம். ஒளிமயமான எதிர்காலம் தெரிகின்றது. சமாதானத்தின் பயன்களை அறுவடை செய்யச் சளைக்காது நாம் பாடுபடுவோம்.

ஸ்ரீலங்கா First
இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

www.srilankafirst.com

(C/20957)

உதயன்

## இரட்டை வேட காய் நகர்த்தல்

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழுமுயற்சி எடுத்துவருகின்றார். அதன் முதல் கட்டமாக விடுதலைப் புலிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் சமாதான முயற்சிகளையும் சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாக - ஒரேகுரலில் - வரவேற்கின்றது.

சமாதானத்தின் நாமத்தால் ஆட்சிப்பீடமேறிய தனது அரசினால் செய்யமுடியாததை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு சாதித்துவிடுமோ என்ற காழ்ப்புணர்வு ஒருபுறம்.

முழுநாட்டையுமே ஆட்டிப்படைக்கும் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு நிரந்தரத் தீர்வு கண்டுவிட்டால் தன்னுடைய கட்சிக்கு அரசியல் எதிர்காலமே இல்லாமறபோய்விடும் என்ற அச்சம் மறுபுறம்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டு அவர்களும் இந்த நாட்டில் சமமான - சுயகௌரவமுடைய - பிரஜைகளாக வாழ வழி ஏற்பட்டுவிடுமோ என்ற எரிச்சல் மற்றொருபுறம்.

இதனால் -

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கோ அவை வேப்பங்காயாகக் கசக்கின்றன.

தன்னுடைய அரசியல் செல்வாக்கையும் அதிகார மிடுக்கையும் வைத்துக கொண்டு இந்த முயற்சிகளைக் குழப்பிவிடலாம் என்பது அவரது எண்ணம்.

என்றாலும் பிரதமர் ரணிலன் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேசரீதியில் வலுவான ஆதரவும் பக்கபலமும் இருக்கும்போது அதனைப் பகிரங்கமாகக் குழப்ப முயல்வது தனக்குத்தானே குழிபறிக்கும் செயலாகிவிடலாம் என்ற அச்சமும் ஜனாதிபதிக்கு உண்டு. எனவே நாசூக்காகக் காய்களை நகர்த்த அவர் விழைகின்றார்.

வெளியில் - சர்வதேச உலகுக்கு - சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பவர்போல தன்னைக் காட்டிக்கொண்டு மறைவில் கைவரிசையைக் காட்டும் திட்டமாக அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்த இரட்டை வேடம் ஜனாதிபதிக்கு ஒன்றும் புதிதல்ல. ஒருபுறம் சமாதானத் தேவதையாகத் தன்னை வெளியில் காட்டிக்கொண்டு மறுபுறம் போரை நாடும் தீவிரவாதியாகவும் அவர் நடந்துகொள்கிறார் என்று புலிகள் அடிக்கடி சுட்டிக்காட்டி வருவதும் கவனிக்கத்தக்கதொன்று.

தற்போதைய சமாதான முயற்சிகளின் விடயத்திலும் அவரது இந்த இரட்டை வேடமே வெளிப்படுகின்றது.

பகிரங்கப் பேச்சுகளிலும் அறிக்கைகளிலும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு தலைமைத்துவம் வழங்குவது தானே என்றும், அதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி பிரகடனப்படுத்தி வருகின்றார்.

ஆனால், கட்சிக்கூட்டங்கள் மற்றும் பிரசாரங்களில் முற்றிலும் வேறு மாதிரியான நிலைப்பாட்டை அவர் பின்பற்றுகின்றார்.

"நான் நினைத்தால் இராணுவத் தளபதிக்கு ஒரு கட்டளை வழங்குவதன்மூலம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்குவேன்". "இந்த ஒப்பந்தம்மூலம் நாட்டின் இறைமையை ரணில் விற்றுவிட்டார்", "சமாதான முயற்சிகள் என்ற பெயரில் ரணில் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார்" என்று தமது கட்சிக் கூட்டங்களில் அவர் உரையாற்றி வருவது தெரிந்ததே.

ஆனால், இந்த உரைகள் பகிரங்கமாகும்போது சர்வதேச ரீதியிலான அழுத்தங்களுக்கு ஆளாகும் ஜனாதிபதி சந்திரிகா அதனால் சீற்றமடைகின்றார்.

விளைவு....

இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களின் பக்கம் சீற்றம் திரும்புகின்றது. அவரது கட்சிக் கூட்டங்களில் பிரசன்னமாகியிருக்கும் பத்திரிகையாளர்கள் அல்லது பத்திரிகையாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படுவோர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் அக்கூட்டங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

அதேசமயம், இந்த சமாதான உடன்படிக்கையைத் தீவிரமாக எதிர்க்கும் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் சேர்ந்து உடன்படிக்கையைச் செயலிழக்கவைப்பதற்கான திட்டங்களையும் ஜனாதிபதி தீட்டுகின்றார். இதற்கான சந்திப்புகள், கூட்டங்கள் ஜனாதிபதி மாளிகையில் மும்முரமாக நடக்கின்றன.

குறுகிய அரசியல் லாபங்களுக்காக போடப்படும் இத்தகைய இரட்டை வேடங்கள் தனக்கு மட்டுமல்லாமல் முழுநாட்டுக்குமே பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதை ஜனாதிபதி உணர்ந்துகொள்வது நல்லது.

(பெற்றோர் அசிரத்தைக் காட்டுவது ஏன்?)

## பிள்ளைகளுக்கு எட்டாத இடத்தில் நச்சுப் பொருள்களை வையுங்கள்!

யாழ்ப்பாணம்,மார்ச்6

வீட்டில் மூன்று, நான்கு குழந்தைகள் இருப்பார்கள். ஆனால் பெற்றோர் அசிரத்தையாக அபாயகரமான கிருமிநாசினிகள் போன்ற நச்சுப் பொருள்களைக் கூட அவர்களின் கைக்கு எட்டக்கூடிய இடத்தில் வைத்துவிடுகிறார்கள். ஒன்றும் "ரியாத குழந்தைகள் அவற்றை கையில் வைத்து விளையாடுகின்றார்கள். சிலவேளைகளில் குடித்தும், உட்கொண்டும் கூட விடுகிறார்கள். இதனால் எத்தனை விபரீங்கள்?

பயங்கரம் நிகழ்ந்தவுடன் கத்திக் குளறிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறார்கள் வீட்டில் உள்ள அனைவரும். சிலவேளைகளில் பாதிக்கப்பட்ட குழந்தை மரணிக்கவும் நேரிடுகிறது.

சோடா போத்தல்களில் மண்எண்ணெய், பெற்றோல் போன்றவற்றை வாங்கி வீட்டில் சர்வசாதாரணமாக வைக்கப்படுகின்றன. சின்னஞ் சிறுசுகள் அந்தச்சோடா' போத்தலை எடுத்து 'மடக் மடக்' என்று குடித்துவிடுகின்றார்கள். இவ்வாறன சம்பவங்கள் தற்போது குடாநாட்டில் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன.

வீட்டில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கிருமிநாசினிகள், நுளம்புத்திரி, மருந்துக் குளிகைகள், பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் நச்சுப் பொருள்கள் வைக்கப்படுகின்றன. குழந்தைகள் இவற்றை எடுத்து குடித்தோ, கடித்தோ, சாப்பிட்டோ விடுகிறார்கள். அதனால் ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது.

நுளம்புத்திரியை, மருந்துக் குளிகைகளை எடுத்து சிறுபிள்ளைகள் வாயில் போட்டு சாப்பிட்டுவிடுவார்கள். பின்னர் குழந்தைகளுக்கு ஒரே வயிற்றோட்டம் அடிக்கும் அல்லது ஒரே வாந்தியாக இருக்கும்.

ஆனால் பெற்றோருக்கு என்ன நடந்தது என்றே தெரியாதிருக்கும். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றாலும் தகுந்த சிகிச்சையை அளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதனாலும் ஆபத்து ஏற்படும் சாத்தியங்கள் உண்டு.

இவ்வாறான விபரீதங்களை, ஆபத்துக்களைத் தவிர்க்க பெற்றோர்களாலதான் முடியும்.

இந்த அறிவுறுத்தல்களையும் எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார் அச்சுவேலி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.விமலேந்திரன். (க-180)

## இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியை நினைவு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,மார்ச்6

இணுவில் மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை அமரர் திருமதி செல்லையா புவிநாயகம் ஞாபகார்த்தமாக கல்லூரியில் புலமைப் பரிசில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் மாதாந்தம் இக்கல்லூரியின் 6 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவிருப்பதாகவும் -

இதற்கென வறுமை, திறமை என்பவற்றின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர் எனவும் - கல்லூரி அதிபர் துரை. எங்கரசு தெரிவித்தார்.

இதற்கென அன்னாரது புதல்வர் முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபா நிதியை வைப்புச்செய்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் கல்லூரி அதிபர், இணுவில் கிராம அலுவலர் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட 12 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (க-4)

## உரும்பிராய் பகுதி பாடசாலைகளுக்கு நிதி அன்பளிப்பு

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தினர் உரும்பிராய் பகுதி பாடசாலைகளுக்கு பல லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

☆ உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா.

☆ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபா.

☆ உரும்பிராய் சந்திரோதயத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

☆ உரும்பிராய் றோ.க.வித்தியாலயம், ஊரெழு கணேச வித்தியாலயம் ஆகியவற்றுக்கு தலா 30 ஆயிரம் ரூபா. (க-72)

### உதயவாக்கு

உங்களுடைய நேரத்தை மற்றவர்களிடம் செலவுசெய்வதற்கு ஒப்படைக்காதீர்கள்.

### நாளை

மாசி 22
வியாழக்கிழமை
(07.03.2002)
திதி : நவமி
நள்ளிரவு 12.32 வரை.
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு 4.27 வரை.
சுபநேரம் : 7.55 - 9.25
ராகுகாலம் : 1.55 - 3.25
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

### சீரான காலம் சிறப்புறத் தெரியுதம்மா!

போரெனும் அரக்கன் மாள
பூத்திட அமைதிப் பூங்கா
சீரெலாம் ஒன்று சேர
சிறப்புற மக்கள் வாழ
அராத உவகை மேவ
ஆனந்தக் கடலில் மூழ்கி
ஊராரும் இனமும் கூடி
ஒன்றாக உவந்து ஆடி
வராதோ? என வருந்த
வந்த இச் சுதந்திரத்தால்
தீராது என இருந்த
தொல்லைகள் தொலைந்து போக
ஓரைந்து கரத்தான் பாதம்
ஓம்பும் நாள் மலர்வதாக
சீராக வாழும் காலம்
சிறப்புறத் தெரியுதம்மா!

- விகடகவி.

## விக்கிரகங்களைத் தங்கள் எண்ணத்துக்கு மாற்றி வேறிடத்தில் அமைப்பது விதியை மீறும் செயல்

### நியந்த்ரீ வெளியீட்டு விழாவில் கலைப்பீடாதிபதி

யாழ்ப்பாணம்,மார்ச்6

ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகங்கள் அவரவர் எண்ணத்துக்கும் - விருப்பத்துக்கும் - மாற்றி அமைப்பது என்பது ஆகம விதிமுறையை மீறும்செயலாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் நியந்த்ரீ பிராமணர் அமைப்பின் தலைவரும் கலைப்பீடாதிபதியுமான பிரம்மஸ்ரீ ப.கோபாலகிஷ்ணஐயர்.

ஸ்ரீலஷ்சுமி நாராயண கல்யாண மண்டபத்தில் நியந்த்ரீயின் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. கோபாலகிஷ்ணஐயர் அங்கு தலைமையுரையாற்றுகையில் மேலும்கூறியதாவது:-

இன்று ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் நினைத்த மாத்திரத்தில் விக்கிரகங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. பக்தர்கள் விருப்பத்திற்கு அமைவாகவும் இவ்வாறு விக்கிரகங்கள் அமைக்கப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும்.

விக்கிரகங்களை அமைக்கும்போது நாம் சூரிய, சந்திரர் உள்ளவரை இந்த விக்கிரகம் இந்தப் பீடத்தில் அமைநதிருந்து அருள்பாலிக்க வேண்டும் என்று மந்திர உச்சாடனம் செய்தே பிரதிஷ்டை செய்கின்றோம். இதற்கு ஆகம விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் நாம் விக்கிரகங்களை நினைத்தமாத்திரத்தில் மாற்றியமைப்பது நிறுத்தப்படுதல் வேண்டும். இந்த விடயத்தினை இன்று வெளியிடப்படும் இந்தப் புத்தகங்கள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. ஆலயங்களை நிர்வகிக்கும் பரிபாலன சபையினர் தாம் நினைத்தபடி ஆலயங்களில் குருக்களை நியமிப்பதும் மாற்றுவதும் வழக்கமாகிவிட்டது. இது குருவுக்கு வழங்கப்படும் உயர்ந்த அந்தஸ்தினை குறைப்பதாகும். இந்த நிலைமைமாறி குருக்களுக்குரிய பணிவு, கௌரவம் அளிக்கப்படவேணடும். இதனை சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

இன்று எமது நியந்த்ரீ அமைப்புக்கு நிதி நெருக்கடி உள்ளது. ஏனைய நிறுவனங்கள் வெளிநாடுகளில் உதவி பெற்று தம்மை வளர்த்துக் கொள்வதுபோல் வெளிநாடுகளிலுள்ள எமது சமூகத்தாரிடம் இருந்து பெரும் நிதியினைத் திரட்டிக் கொள்வதன் மூலம் நியந்த்ரீயை வளர்க்க முடியும்.

இன்று பிராமணக் குருக்கள் கூட வெளிநாடுகளை நாடுகின்றனர். நாம் இங்குள்ள எதிர்காலத்துச் சந்ததியினராகிய எமது சமூகத்துப் பிள்ளைகளை குரு அந்தஸ்துப் பெறத்தக்க நல்ல வழியைக் காட்டவேண்டும்.

எமது பிள்ளைகள் கல்வியில் இந்துமதத்துக்கோ, சமஸ்கிருதத்துக்கோ சேவையாற்ற விரும்பினால் அதற்கு பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும். அதைவிடுத்து வேறு கற்கை நெறிகளுக்கு அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

சிவாசாரியார்கள் தம்மிடையே வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமையுடன செயலாற்றவேண்டும். இன்றைய சமூகம் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மதிப்பளிக்காத நிலை உருவாகிவருகிறது. குரு பிரமத்திற்குச் சமனானவர். பெற்றோர் பிரமத்தின் பிம்பங்கள். இத்தகைய விடயங்களை விளககுவதாக இன்று வெளியிடப்படும் புத்தகங்கள் அமைக்கின்றன எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இந்த விழாவில் கலந்துகொணடு உரையாற்றிய சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

ஸ்ரீமஹாவிஷ்ணு மண்டப பூஜை என்னும் இந்த நூல் மஹா விஷ்ணுவின் மண்டப பூஜை இயற்றுவதற்கு மந்திரங்களைப் பாதுகாப்பதில் உள்ள பிரச்சினையை நீக்கும் - என்றார்.

பிரம்மஸ்ரீ து.சுந்தரமூர்த்திக் குருகள் அறிமுகவுரை நிகழ்த்தும்போது -

ஷண்மதப் பிரிவுகளின் ஒற்றுமையையும் இந்த நூல்கள் விளக்குவதாகக் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் முடிவில் ஸ்ரீமஹா விஷ்ணு மண்டப பூஜை, இலங்கையில் சமஸ்கிருத மொழி நூல்கள் என்னும் இரண்டு நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

முதற்பிரதியை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ க.புருஷோத்தமக் குருக்கள் பெற்றுக்கொண்டார். (க-ரி)

## இரக்கம் காட்டினால் இரக்கம் பெறுவாய்!

### தவக்காலச்சிந்தனை

### இருபத்திரண்டாம் நாள்

"நீதியின்பால் பசி தாகமுள்ளோர் பேறுபெற்றோர்" (மத்.5:6) என அருள் வாக்குரைத்தார் எம் இறைமகன் இயேசு.

அன்று உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் உமது வழிமுறைகளைக் கைவிட்டு தீயவழியில் சென்றபோது "நீதியைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள், திக்கற்ற பிள்ளைக்கு நீதி வழங்குங்கள், கைம்பெண்ணுக்காக வழக்கு நடத்துங்கள்" (இசை 1:17) என இசையாஸ், ஆமோஸ் போன்ற இறைவாக்கினர்கள் மூலமாக அநீதிக்கு எதிராகக் குரலெழுப்பி நீதியை நிலைநாட்ட உமது திருவாக்கைத் தந்தீரே.

நீர் இவ்வுலகை விட்டுச்சென்ற பின்பும் உமது சீடர் யாகப்பர் வழியாக "நீங்கள் கூடியுள்ள இடத்தில் பொன் மோதிரம் அணிந்து பகட்டான ஆடை உடுத்திய ஒருவன் வருகிறான் என வைத்துக்கொள்வோம். அழுக்கு கந்தையோடு ஏழை ஒருவனும் அங்கே வருகிறான். பகட்டான உடை உடுத்தியவனைப் பார்த்து 'ஐயா, தயவுசெய்து இங்கே அமருங்கள்' எனக் கூறி கவனித்துக்கொள்கறீர்கள். ஏழையிடமோ 'அடே அங்கே நில்' என்கிறீர்கள். அல்லது 'தரையில் உட்கார்' என்கிறீர்கள். இப்படி உங்களுக்குள்ளே வேறுபாடு காட்டி தவறான முறையில் தீர்ப்பிடுகிறீர்கள் அல்லவா?" (யாக.2:2-4) என மனித மாண்பியத்திற்கும், நீதி முறைக்கும் வேறுபாடான எங்கள் நடைமுறை வாழ்வில் காணும் குறைகளை நாங்கள் களைந்தெறிய வழிகாட்டினீர்கள்.

ஆனால் இன்று நாங்கள் அப்படி வாழ்கின்றோமா? சமூக, சமுதாய அமைப்புக்களிலே செல்வம், அந்தஸ்து, இனம், மொழி, பண்பாடு, செல்வாக்கு போன்ற நீதிக்கு விரோதமாக அநீதமான செயல்முறைகளுக்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தந்துகொண்டிருக்கின்றோம். கொள்ளை இலாபம், வட்டி, லஞ்சம், ஊழல் இவைகள்மூலமாகவும் கொத்தடிமை, வரதட்சணைக் கொடுமைகள் மூலமாகவும் அநீதியை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஏன், அதைவிட மேலும் ஒருபடி உயர்ந்து எந்த இறைவனால் நாம் படைக்கப்பட்டோமோ அதே இறைவனுக்கு எதிராக சாதி என்ற மாஜயை வளர்த்து சாதிக்கோர் ஆலயத்தை உருவாக்கி, இது எங்கள் ஆலயம். இந்த ஆலயத்தினுள் இருக்கும் தெய்வம் எங்களுடையது எனக் கூறி இறைவனையும், அவர் வாழும் ஆலயத்தையும் எமக்கே சொந்தம் என உரிமை பாராட்டுகின்றோம். இப்படிப்பட்ட ஈனச் செயல்கள் எமது உள்ளங்களில் உறங்கிக் கிடக்கும்வரை நீதியின் தேவனாம் எம் ஆண்டவர் எமது உள்ளங்களில் எப்படி வாசம்செய்வார்.

எங்கள் உள்ளம் வெறுமையாகட்டும், காழ்ப்புணர்ச்சிகள் அகலட்டும், வரட்டுக் கர்வம் விலகட்டும், படைப்பின் இறைவன் அனைவருக்கும் சொந்தமாகட்டும். அப்போது எங்கள் உள்ளங்களில் நாங்கள் கொண்டிருக்கும் விசுவாசம், பிறரோடு உறவுகொள்வதில் நீதி, நியாய உணர்வினைச் செயலாக வெளிக்காட்டவும், இதன்மூலமாக நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களாக நாங்கள் வாழவும், சமூகத்தை நீதி வழியில் கொண்டுசெல்லவும் இறைமகன் உறுதுணையாக இருப்பார்.

*குருநகர்.* **க.அருள்நேசன்.**

## தவறிவிட்டது!

ஆசீர்வாதம் புஷ்பராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் கடந்த செவ்வாயன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கஜேந்திரன், பலாலி றோட் (முத்திரிகைப் பழக்கடை) கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரிக்கோ அல்லது திருநெல்வேலி உரக் களஞ்சியக் கடையிலோ கொடுத்துஉதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(1360)



## உடன் தேவை

நீங்கள் வெல்டிங் ஒட்டு வேலைகளில் திறமையானவர்கள். ஆனால் உங்களுக்கு வேலைகள் குறைவாக இருக்கும். இதோ மொத்தமாக வேலைகள் தருவதற்கு நாங்கள் காத்துநிற்கின்றோம்.

தொடர்பு கொள்ளுங்களேன்:

**மங்களா தளபாட நிலையம்,**
*153, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(1357)


## THANKSGIVING SERVICE AND INTERMENT OF ASHES

*Dr.W.Robert Holmes and Mrs. Frannie Holmes*

We cordially invite the Past Students and Friends of Late **Dr.W.R.Holmes and Late Mrs.F.Holmes** and well wishers of the J.D.C.S.I Jaffna College and Uduvil Girl's College to be present at the Thanksgiving Service for life and work of Holmeses.

Venue : *C S I church Uduvil*
Date : *Wednesday 6th March 2002*
Time : *3.30 p.m*

Bishop J.D.C.S.I.
Principal Jaffna College,
Principal Uduvil Girl's College.

(1358)

## நீர் நிறைந்த விழிகளுடன் ஆறாத்துயரில்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் Dr. கந்தையா பாலசிங்கம்

தோற்றம் 28.05.1937 — மறைவு 15.02.2002

*அட்டமித்திதி: 06.03.2002*

அன்புருவே! எங்களுக்குச் சுருதியான
அற்புதமே! நீங்கள் சென்று ஓராண்டாச்சோ?
மண்ணிலே பல உறவு இருந்தாலும் நீர்
வைத்த அன்புக்கு ஈடாகுமோ? நேற்று நீங்கள்
கண்துடைத்து, கருணை செய்து, கனிவாய்க்காத்து
கண்கண்ட கடவுளானீர்! நாமெல்லோரும்
முன் செய்தவத்தால் உம்மோடு வாழ்ந்தோம்
மூலவேர் நீர்; உமையிழந்து வாடுகின்றோம்.
"அப்பா" என்றரற்றிய நா ஓய்ந்து போச்சு!
"அப்பா" என்றழுதவிழி காய்ந்து போச்சு!
பொய்யாகப் போகாதோ உம்பிரிவு?
புயல் காய்த்த மரமாச்சு..... எங்கள் வீடு!
மெய் தவழும் உம் முகமும் சிரிப்பும் எங்கே?
உய்ய வழி அற்றழுதோம், லட்சம் ஆண்டு
ஓடினாலும் உமை மறக்காது எங்கள் நெஞ்சே!
கண்ணீர் மலர்கள் சாத்தி வணங்குகின்றோம்
கவிதையிலே அஞ்சலித்தோம்! உங்களுக்கு
நன்றிசொல்ல வார்த்தையில்லை! உம் கனவை
நனவாக்க உம்மை நினைவோம்! என்றும் உம்மை
மண்ணுள்ள வரை நினைவோம் என்றும் எம்மை
"அருள்வடிவாய்" வழிநடத்த வேண்டுகின்றோம்!
விண்ணகத்தில் இளைப்பாறும் உங்கள்.....

*ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரசன்னா வைத்திய நிலையம்,
*15,பேரின்பநாயகம் வீதி,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

(1362)

## 20 மாணவர்கள் புலமைப் பரிசில் நிதி பெறத் தெரிவு

வலி.தெற்கு,மார்ச்6

ஜனாதிபதி விசேட புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் வலிகாமம் கல்வி வலயத்தில் இருபது மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி கிடைக்கவுள்ளது.

தரம் 6இல் கல்வி பயிலும் புலமைப் பரிசில் திட்டத்துக்கு பொருத்தமான மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு, ஆவணங்கள் பார்வையிடல் கடந்த வாரம் வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெற்றன.

மாணவர்களது இணைப்பாட விதான செயற்பாடுகள், பெற்றோர் இருக்கின்றனரா - இல்லையா, உடல் ஆரோக்கியம், இடம்பெயர்ந்து வாழ்கிறார்களா போன்றன கவனத்தில் எடுக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 20 மாணவர்கள் புலமைப் பரிசில் நிதியைப் பெறத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிதி விரைவில் மாதந்தோறும் கிடைக்க இருக்கின்றது. (க-152)

## பெரியார்களின் படங்கள் நாளை திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரை மண்டபத்தில் வண.கலாநிதி டானியல் தியாகராஜா நைல்ஸ் அவர்களின் படமும் அதிவண. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்களுடைய படமும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு திரைநீக்கம் செய்யப்படும்.

இவர்கள் இறையியலுக்கும் திருச்சபைகளுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்தே இரு படங்களும் திரைநீக்கம் செய்யப்படுகின்றன. (க)

## நடமாடும் பொலீஸ் சேவை

இளவாலை,மார்ச்6

நடமாடும் பொலஸ் சேவை ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை சாந்தையில் இடம்பெறவுள்ளதாக இளவாலை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.கே.டி.ஹேமந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த திங்கட்கிழமை உதவிப் பொலீஸ் அதிகாரி ஜி.சிறிநிஷாந்த தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் அடையாள அட்டை சம்பந்தமான 6 பிரச்சினைகளுக்கும் 11 முறைப்பாடுகளிற்கும் உடனடித் தீர்வு காணப்பட்டதாகவும் இதில் 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். (க-48-ரி)

## நாவற்குழி ம.வி. வெகு விரைவில் பழைய இடத்தில்!

யாழ்ப்பாணம்,மார்ச்6

நாவற்குழி மகா வித்தியாலயம் மீண்டும் சொந்த இடத்தில் வெகு விரைவில் செயற்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபொழுதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அப்பகுதி கிராம அலுவலர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை மீண்டும் செயற்படுவதற்கு முன்பு அங்கு சென்று கல்வி கற்பதற்கு விருப்பமுடைய மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் கேட்டுள்ளார்.

பதிவுகளைத் தற்பொழுது பாடசாலை தற்காலிகமாக இயங்கிவரும் உரும்பிராயிலும், சொந்த இடத்தில் உள்ள பாடசாலையிலும் மேற்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-10)


## தேவை

எமது நிறுவனத்துக்கு வேலையாளர்கள் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு:
ஹோட்டல் றொலெக்ஸ்.
*340, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(1364)



புனர்வாழ்வு, புனர்நிர்மாண, அகதிகள் மறுவாழ்வு அமைச்சும் உல்லாசப் பயணிகள் அமைச்சும் இணைந்த

## கூட்டுப் பயிற்சித் திட்டம்

## WALK IN INTERVIEWS

விடுதி நிர்வாகமும், உணவு பரிமாறல் பற்றிய அடிப்படைப் பயிற்சியும் - மார்ச் 2002

மேற்படி பயிற்சிகள் சம்பந்தமாக ஸ்ரீலங்கா உல்லாசப் பயணிகள், விடுதி நிர்வாக நிறுவனத்தால் மார்ச் மாதம் 2002 முதல் யாழ்.நகரில் ஆரம்பமாகும்.

| பயிற்சி விவரம் | காலம் | குறைந்த பட்சத்தகைமை |
|---|---|---|
| விடுதி வரவேற்பாளர் | 5மாதம் | G.C.E. (O/L) 6 பாடங்களில் (3C உட்பட)சித்தி இரண்டு தடவைக்கு மேற்படாத (கணிதம், ஆங்கிலம்உட்பட) |
| விடுதி பராமரிப்பாளர் | 5மாதம் | |

வயது: 17 இற்கும் 28 இற்கும் இடையில் (03.03.2002 அன்று)

கட்டண விவரம்:
விடுதி வரவேற்பாளர்: 400/= X 5 மாதம்
விடுதி பராமரிப்பாளர்: 400/= X 5 மாதம்

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் உட்பட 150/=அறவிடப்படும்.

மேற்படி தகைமை உடையவர்கள் சமுகமளிக்க வேண்டிய திகதிகள்: 6,7,8 மார்ச் 2002

இடம்: கியுடெக்
*இல.14, தியோகு பாதை,*
*மத்தியூஸ் வீதி,யாழ்ப்பாணம்.*
*T.P.2571*

*நிறைவேற்றுப் பணிப்பாளர்,*
*இலங்கை உல்லாசப் பயணிகள் நிறுவனம்.*

(1356)


## கருத்தரங்குத் தொடர் - 01

விடயம் : பொருளாதாரக் கொள்கைகளும் வளர்ச்சியும் அபிவிருத்தியும்
வழங்குபவர் : திரு.V.P.சிவநாதன்
*(தலைவர், பொருளியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்)*
காலம் : இன்று (06.03.2002) புதன்கிழமை பி.ப.3.00 மணி
இடம் : பொருளியற்றுறை மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம்

*ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளவும்.*

*குறிப்பு: க.பொ.த. (உ/த) மாணவர்கள் கலந்து பயன் பெறவும்.*

இளம்பொருளியலாளர் மன்றம்,
பொருளியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(1366)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு தியாகராசா

*(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)*

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தியாகராசா அவர்கள் 28.02.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் பார்வதி அவர்களின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, காலஞ்சென்ற Dr.குலசிங்கம் (Ph.D) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நித்தியானந்தன் (A.E., நீர்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), சிவானந்தன் (T.T.O., Sri LankaTelecom, Jaffna), யோகானந்தம (ஜேர்மனி - கொழும்பு ராஜ்கோ இன் உரிமையாளர்), அருளானந்தம் (Ph.D Mech. - Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிற்றம்பலம் - கண்ணகை தம்பதியினரின் அன்பு மருமகனும் சி.ஸ்கந்தா (ஓய்வூதியர்), காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் வேலாயுதம் (கவிஞர் ஜேர்மனி), காலஞ்சென்ற சபாபதி மற்றும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற விதானையார்), கனகசிங்கம் (ஓய்வூதியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிறேமா, சாரதாதேவி, கேமசூரியா, கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஜிதா, சிறீகாந்தா, நிகேதன், ரோகிணி, சிறிகிருஷ்ணா, கோவினி, அஸ்வினி, துளசி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகளுக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சூரியவாசா"*
*சம்பந்தர் கடையடி,*
*கரவெட்டி மத்தி.*

தகவல்:
தி.சிவானந்தன்
(மகன்)

(சி-20959)

## தம்பிப்பிள்ளை நாகலிங்கம்

அளவெட்டி வடக்கு, 'செட்டிச் சோலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (05.03.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக்கணவரும், கமலாதேவி (அதிபர் யா/சதானந்தா வித்தியாலயம், அளவெட்டி), பரமானந்தன் (இயக்குநர், சீகிரி வீவிங் மில்ஸ் லிமிட், கொழும்பு), பிரணவரூபன் (ஆசிரியர் யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி (அரச நில அளவையாளர்) மற்றும தவராணி, நிலாவரசி (ஆசிரியை, யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்) ஆகியோரின் மாமனாரும், மயில்வாகனம், இராசம்மா, பண்டிதர் இராஜரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் பண்டிதர் நாகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் மைத்துனரும், சோபனா (வெளிவாரி மாணவி, பட்டப்படிப்புகள் கல்லூரி), அனுஷன் (பொறியியற்பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்) தர்சன், வைஷ்ணவி, சாம்பவி, செளமியன், எழிலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2002) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சோபனம்"*
*செட்டிச் சோலை,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.*

தகவல்:
பிரணவரூபன *(மகன்)*

(1363)

# அட! அப்பாடியா!!

## ஹொலிவூட்டின் குண்டு நடிகை



இருப்பதை மிகைப்படுத்தியும் இல்லாததை இருப்பதாகக் காட்டுவதிலும் ஹொலிவூட் திரைப்பட உலகத்துக்கு நிகரில்லை.

இங்கே இரு இளைஞர்களின் மத்தியில் நிற்கும் பெண்ணும் ஒரு பிரபல ஹொலிவூட் நடிகைதான். இரண்டு வருடங்களுக்கு முன்பு வெளியான 'ஷேக்ஸ் பியர் இன் லவ்' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்தவர். விடயம் அதுவல்ல ஒல்லியான நெகு நெகுவென்ற தேகத்தை உடைய அவர் 'பிசாலோ ஹல்' என்ற படத்துக்காக தன்னை இவ்வாறு குண்...டுப் பெண்ணாக ஆக்கிக் கொண்டுள்ளார்.

அதற்காக சுமோ மல்யுத்த வீரர்கள் போல் நிறையச் சாப்பிட்டு அவர் குண்டுப் பெண்ணானார் என்று கற்பனை பண்ணிக் கொள்ளாதீர்கள். 'நோட்டி புரபசர்' படத்தில் நடிகர் எட்டி மர்பி நடித்தது போல் கொழுப்பு உடை அணிந்தே அவர் குண்டுப் பெண்ணாக மாறியுள்ளார்.

அண்மையில் இதே உடை, மேக்கப்புடன் பாரிஸ் நகர 'பஷன் ஷோ' ஒன்றில் கலந்துகொண்டார் நடிகை. குட்டு உடைந்து இன்னார்தான் இவர் என்று தெரிந்த பின்னும் ரசிகர்கள் அவரைக் கண்டுகொள்ளவே இல்லையாம். இதனால் மனம் வெறுத்துப்போன அவர் நிகழ்ச்சியின் அரைவாசியிலேயே புறப்பட்டு வீட்டுக்குச் சென்று விட்டார்.

யார் அந்த குண்டு நடிகை என்கிறீர்களா அவர் இவரேதான். →



## இரவு நேரம் முளைக்கும் சிறுநீர் கூண்டுகள்




பிரிட்டனில் மது அருந்துவோரின் எண்ணிக்கை மிக அதிகம். இவர்களில் இளம் குடிகாரர்களின் சேஷ்டைகள், குறும்புகள் சொல்லிமாளாது.

லண்டன் அதிகாரிகளுக்கு பெரும் தலையிடி தரும் விடயம் என்னவென்றால், குடித்துவிட்டு இவர்கள் லண்டனின் வீதியோரங்களில், கண்ட இடங்களிலும் சிறுநீர் கழித்து நாறடித்து விடுவதுதான்.



இரவு நேரங்களிலேயே இந்த அசிங்கம் நடக்கிறது. இதனைத் தடுப்பதற்கு அதிகாரிகள் எவ்வளவோ நடவடிக்கைகளை மேற்கொண்டு பார்த்தார்கள். ஆனால் சமாளிக்க முடியவில்லை.

தற்போது இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் முறை ஒன்றை பிரிட்டிஷ் அதிகாரிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர். இதற்காக பகலில் மறைந்தும் இரவில் திடீரெனத் தோன்றவும் செய்யும் சிறுநீர் கழிப்பிடங்களை அமைத்து இருக்கின்றார்கள். இதற்கு 'யூரி லிப்ட' என்று பெயர்.



பகல் நேரத்தில் இந்த 'யூரி லிப்ட்'கள் இருக்கும் இடம் சரியாகத் தெரியாது. மாலையானதும் லிப்ட் கூண்டுகள் மாதிரியான இவை வீதியோரங்களில் தடீர் தடீர் என முளைக்கும். முக்கியமாக இரவுக் கேளிக்கை விடுதிகள், 'பார்கள்' என்பன இருக்கும் இடங்களில் இவை அதிகம் காணப்படும். இங்கு சிறுநீர் கழித்துக் கொள்ளலாம்.

இவ்வாறான ஏதாவது திட்டத்தை யாழ். மாநகரசபையும் நகரப் பகுதியில் செயற்படுத்தினால் மக்களுக்கு பயன்படும்.

## நகர சபைத் தலைவியாக இளம் நங்கை

இவரைப் பாருங்கள். இவருக்கு வயது 22தான்; பெயர் சாந்தி. இவ்வளவு தகவல்களும் ஏன் என்று நினைக்கிறீர்களா? இருக்கிறது விடயம்! தமிழ் நாட்டிலேயே மிகக் குறைந்த வயதில் நகரசபை ஒன்றின் தலைவராகி இருக்கிறார் இந்த இளம் நங்கை. ஈரோடு மாவட்டம் தாராபுரம் நகர சபையின் தலைவி இவர்தான். சாந்தி ஒரு பத்திரிகையாளராகவும் இருந்துள்ளார். பாரதீய ஜனதாக் கட்சியின் சார்பில் போட்டியிட்டே நகரசபைத் தலைவராகவும் ஆகியுள்ளார்.



வாஜ்பாய்தான் இந்தியாவின் சிறந்த தலைவர் என்கிறார் சாந்தி. தன்பணி மிகக் கடினமானது என்பதைத் தான் அறிந்து வைத்துள்ளதாகக் கூறும் சாந்தி, தனது நகரசபையை தமிழகத்தின் முதல் நகரசபையாக்குவதே தன் இலட்சியம் என்றும் சொல்கிறார்.

நம் நாட்டு இளைஞிகளுக்கு இது சமர்ப்பணம்.

## பறவைகளின் குரலில் ஓர் இசை மழை

பறவைகள் கத்துவதாயும் கீச்சிடுவதாயும்தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவற்றின் குரலில் அருமையான சங்கீத இசை இருக்கின்றது என்கிறார் ஹைதராபாத்தைச் சேர்ந்த வெஙகடேஸ்வரலு. இவர் ஒரு வித்தியாசமான இசைச் சிந்தனையாளர். மனிதர்களின் குரல் அலுத்துப்போனதாலோ என்னவோ பறவைகளின் குரலை ஆராய்ச்சி செய்யும் முயற்சியில் இவர் இறங்கினார். 21விதமான பறவைகளின் குரல்களை சுமார் 8 மாதங்களாக விரிவாக ஆராய்ந்தார். இதற்காக இவர்பட்ட கஷ்டங்கள் சொல்லில் அடங்கா. இதன் உச்சக் கட்டம் என்னவென்றால் அந்தப் பறவைகளின் ஒலிகளைக் கொண்டே அவர் இசையமைததிருப்பதுதான். அவை பாடல்களாகவும் வெளிவந்துள்ளன. இந்த இசைக்கு இந்தியா முழுவதும் நல்ல வரவேற்பு. இதனை உணர்ந்த ஆந்திர திரை உலகம் அவரைத் தன்னுள சேர்த்துக் கொண்டது. ஏற்கனவே மிமிக்கிரி கலையிலும் இவர் தேர்ச்சி பெற்றிருந்ததால் தறபோது பறவைகளின் ஒலியை வைத்தும் மிமிக்கிரி செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகின்றார்.

## செருப்புகளில் காதல்



மும்பையைச் சேர்ந்தவர் மொடல் அழகி நம்ரதா பருவா. அதனால் என்ன என்கிறீர்களா? அவரது கால்கள்தான் விவகாரமானவை. வித்தியாசமாக ஏதும் கற்பனை செய்துகொள்ளாதீர்கள். காலணிகளை அணிவதில் இவருக்கு ஒரு தனிக் காதல். தற்போது இவரிடம் 150 ஜோடிக் காலணகள் இருக்கின்றனவாம். அதுமட்டுமல்ல முன்னர் இவரிடம் 250 ஜோடிக் காலணிகள் இருந்தனவாம். "அம்மா சொன்னதால் அவற்றில் 100 ஜோடிகளை வீசிவிட்டேன்" என்று சர்வசாதாரணமாகக் கூறுகின்றார் நம்ரதா.

காலணிகளை வைக்கவென இவரது வீட்டில் தனி அறை ஒன்றே இருக்கிறது.

## நிர்வாணப் படம் தந்த ரூ.1 கோடி நஷ்டஈடு

தற்போது மேற்குலகில் பரபரப்பாக அடிபடும் பெயர் சப்ரீனா செட்லூட் ஜேர்மனியின் பிரபல டெனிஸ் வீரரான போரிஸ் பெக்கரின் காதலி இவர். புகழ்பெற்ற 'ராப்' இசைப் பாடகியான இவரது நிர்வாணப் படங்கள் பத்திரிகையில் வந்ததுதான் பரபரப்புக்குக் காரணம். 'மாக்ஸ்' என்ற பத்திரிகை சப்ரீனாவின் இந்த நிர்வாணப் படங்களை வெளியிட்டது. அதைப் பார்த்து பெக்கரும் சப்ரீனாவும் அதிர்ச்சி அடைந்தார்கள். தனது படத்தை அனுமதியின்றி பத்திரிகையில் பயன்படுத்தினார்கள் என்று சப்ரீனா 'மாக்ஸ்' மீது வழக்குத் தொடர்ந்தார். தற்போது சப்ரீனாவுக்கு ஒரு கோடி இந்திய ரூபாய்கள் நஷ்டஈட்டை வழங்குமாறு நீதிமன்றம் மாக்ஸ் பத்திரிகைக்கு உத்தரவிட்டுள்ளது. இதனைவிடவெல்லாம் முக்கியமானது என்னவென்றால் சப்ரீனா ஒரு தமிழ்ப் பெண். அவரது தந்தை கிருஷ்ணன். தமிழ்நாட்டின் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். தாயார் தெரஸா கோழிக்கோட்டையைச் சேர்ந்தவர். ஆனால் சப்ரீனாவுக்கு தமிழ் தெரியுமா என்பது எங்களுக்குத் தெரியாது.



# புதிய தலைமுறை ரோபோக்கள்

# மனிதர்களுக்கு உதவத் தயார்!

ரோபோக்கள் எனப்படும் இயந்திர மனிதர்களின் பயன்பாடு இன்று உலகெங்கும் அதிகரித்துள்ளது. பொதுவாக அதிக மனிதவலு தேவைப் படும் பெரிய தொழிற்சாலைகளில்



இவை அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றன.

இவற்றை நவீன மயமாக்கி அன்றாட மனிதத் தேவைகளுக்கும் பயன் படுத்துவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கு நாடுகளில் அதிகளவில் இடம்பெறுகின்றன.

ரோபோ தயாரிப்பில் ஜப்பானுக்கு நிகராக வேறெந்த நாடும் தற்போது இல்லை. அந்தவகையில் பல வடிவங்களில் பல செயல்களைச் செய்யும் ரோபோக்களை ஜப்பான் ஆண்டு தோறும் உருவாக்கித் தள்ளுகின்றது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மட்டும் 'அய்போ', 'அசிமோ', 'வாமியன்', 'பினோ', 'போஸி' என்ற பொழுதுபோக்கு ரோபோக்களை ஜப்பான் அறிமுகம் செய்துள்ளது.

இவற்றுக்கு ஜப்பானிலும் மேற்கு நாடுகளிலும் அமோக வரவேற்பு. ஜப்பானில் உள்ள ரோபோ உற்பத்தி நிலையங்களில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான ரோபோக்கள் விற்பனைக்காக வெளியே செல்கின்றன.

பொதுவாக மனிதன் இடும் கட்டளைகளை ஏற்று ஒரு சில செயல்களைச் செய்யும் வகையில்தான் ரோபோக்கள் முன்பு உருவாக்கப்பட்டன. ஆனால் தற்போது வந்துள்ள புதிய தலைமுறை ரோபோக்கள் இதைத் தாண்டி மனிதனைப் போலவே சிந்தித்து ஒருசில செயல்களைச் செய்யக்கூடியனவாக இருக்கின்றன.


இத்தகைய புதிய தலைமுறை ரோபோக்களை 'ஹி மானய்ட் ரோபோ' என்கிறார்கள். அதாவது இவை ஓரளவு மனிதனைப் போலவே சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் கொண்டவை. இவற்றுடன் நாம் பேசலாம். கொஞ்சி விளையாடலாம்.

மனிதனின் உத்தரவு இல்லாமலேயே - தன்னிச்சையாக - செயல்களைச் செய்யும் புத்திசாலித்தனமும் இந்த ரோபோக்களுக்கு உண்டு.

'பினோ' என்பது 70 சென்ரிமீட்டர் உயரமும் 4.5 கிலோ நிறையும் கொண்ட புதிய தலைமுறையைச் சேர்ந்த ஒருவகை ரோபோ. 'கிடானோ சம்பியோடிக் சிஸ்ரம்' என்ற நிறுவனம் இந்த வகை ரோபோக்களை உற்பத்தி செய்கின்றது.

"தற்போதுள்ள ரோபோக்கள் மிகவும் விலையுயர்ந்தவையாக இருக்கின்றன. எனவே குறைந்த செலவில் ரோபோக்களை உற்பத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டவையே 'பினோ' ரோபோக்கள்" என்கிறார் இவற்றை வடிவமைத்த டட்சுயா மிட்சுயி என்ற ரோபோ நிபுணர்.

இவர் 'போஸி' என்ற இன்னொரு வகை ரோபோவையும் உருவாக்கியுள்ளார். இந்த 'போஸி' ரோபோவை நீங்கள் உங்கள் அலுவலக வரவேற்பறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். வரவேற்பறையில் அமர்ந்திருக்கும்





ஒரு அழகான இளம்பெண் இனிமையான குரலில் நளினத்துடன் செய்யும் அத்தனை செயல்களையும் 'போஸி' உங்களுக்காகச் செய்யும். அதற்காக 'போஸி' பெண்வர்க்கத்தைச் சேர்ந்த ரோபோ என்று தப்பாக உதாரணம் கொள்ளாதீர்கள்.

இந்தவகை ரோபோக்களை வாங்குவதற்கு தற்போதே அமெரிக்காவில் இருந்து ஏராளமான கொள்முதல் உத்தரவுகள் கிடைத்துள்ளன என்கிறது 'போஸி'யை உற்பத்தி செய்யும் நிறுவனம்.

ஹொண்டா நிறுவனம் மனித சிந்தனைத் திறன்கொண்ட 'ரோபோ'க்களை வடிவமைத்துள்ளது. இதற்கு 'அசிமோ' என்று பெயர். 'அட்வான்ஸ்'

(10ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். (1203)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. பாதிக்கோழி உட்பட சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P. 3529, 2867 (1273)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (1350)

## புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா இன புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. பிறிமா சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளுக்கான பதிவுகள் ஏற்கப்படும். தொடர்பு: வை.சிவகுமார்,461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (1240)

## விற்பனைக்கு

இரண்டு பரப்புக் காணியில் சகல வசதிகளுடனான புதிய வீடும், ஆனைக்கோட்டையில் 36. பரப்பு வயற்காணியும், வீட்டுத் தளபாடங்களும், சில்வர், பித்தளை பாத்திரங்களும் டயனிங் ரேபிலும் அதற்குரிய கதிரைகளும் விற்பனைக்கு உள்ளன. எல்லா நாள்களிலும் பார்வையிடலாம். தொடர்பு: இ.சிவனேஸ்வரி (சந்திரா), பிள்ளையார் கோயில் லேன், தாவடி. (1326)

பாவனையில் உள்ள கையால் இயங்கும் 'GESTETNER' றோணியோ இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1349)

## இலகு திருமண சேவை

1970, உத்தராடம், பாவம் கூடிய 7இல் செவ்வாய், பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. ஆண், பெண் மணமக்கள் தேர்வுக்கு தொடர்புகொள்ளவும்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (1320)

## ஒரு காதலின் கதை

வானொலியில் "கலைஞர் கௌரவிப்பு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய நகந்தரம்பிள்ளையின் நாவல்: "ஒரு காதலின் கதை" இலங்கை இனப் பிரச்சினையோடு பின்னிப் பிணைந்த கதை. வாசியுங்கள்! (1296)

## A/L பொருளியல்

G.C.E. A/L பரீட்சை வினா-விடைகள் 2000, 2001 வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம், பொருளாதார வளர்ச்சி ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (1347)

## தவறிவிட்டது

மிருசுவிலைச் சேர்ந்த வ.வசந்தகுமார் (மாணவன், யா/உசன் இராமநாதன் ம.வி. - மிருசுவில்) என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 091049412) அளவெட்டிக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.மார்க்கண்டு, விடத்தற்பளை, உசன், மிருசுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (1352)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் ஏடு மூலம் தீராத நோய்கள் குணம்பெறல், அதிர்ஷ்ட காலத்தை அறிதல். சனி, ஞாயிறுகளில் 8.30 - 2.00 மணி. தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில். கிழக்கு (1355)

## கப்பலில் தார்

கோப்பாய்,மார்ச்6

யாழ்.வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒரு தொகுதி தார் பீப்பாக்கள் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

(க-72)

# கண்ணீர் அஞ்சலி

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபைத் தலைவராக நீண்டகாலமாக இருந்து ஆலய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவரும், ஆலயத்தின் திருப்பணிகள் இனிதே நடைபெறத் திருப்பணிச்சபைத் தலைவராக இருந்து அயராது உழைத்தவரும், மானிப்பாய் கிராமசபை அங்கத்தவராக இருந்தகாலை எமது ஆலயத்திற்காகக் கிராமசபையூடாக பல உதவிகளைச் செய்தவரும், எமது சமூகத்தின் முன்னோடிகளில் ஒருவருமாகிய

## செல்லப்பா கந்தையா

அவர்கள் 04-03-2002 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய அந்திரான் முருகப் பெருமானை வேண்டிப் பிரார்த்தித்து இறைஞ்சுகின்றோம்.

*அந்திரான் முருகமூர்த்தி கோயில், நவாலி.* - **ஆலய பரிபாலன சபையினர்**

(1353)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா தங்கவடிவேல்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா தங்கவடிவேல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் வேலுப்பிள்ளை தங்கவடிவேல் (உரிமையாளர், வேல் மோட்டோர்ஸ்) அவர்களின் அருமை மனைவியும் ரஞ்சனி (ஆசிரியை, புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலயம், கொழும்பு - 13), ரவீந்திரன் (பொறியியலாளர், லண்டன்), ரவிச்சந்திரன் (கனடா), விஜயமாலா, விஜயஸ்ரீ ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார் (பொறியியலாளர், HTN Information System), சுமங்கலி (லண்டன்), நிரஞ்சனா (கனடா), உமாமகேஸ்வரன் (வவுனியா), திவாகரன் (Senior Systems Analyst, Peoples Bank Head Office) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதுஷன், அபிநயா, விதுஷன், பிரனீற்றா, யதுஷன், ஷயமிகா, தீபிகா, பிரதீப், சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவஞானம், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, அப்புத்துரை, செல்லம்மாவினதும் அன்னலட்சுமி, சண்முகரத்தினம், மகாலிங்கம், வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக இன்று (06.03.2002) புதன்கிழமை முதல் வைக்கப்பட்டு நாளை (07.03.2002) வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்றபின்னர் பிற்பகல் 1.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/1, 1/1, சுவிசுத்தாராம வீதி,*
*கொழும்பு - 06*
*தொலைபேசி: 599483*

(சி-20950)

தகவல்:
வே.தங்கவடிவேல்
(கணவர்)

# வலிகாமம் வலய மாணவர்களுக்கு பாடநூல்கள்

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு மூன்றாம் கட்டமாக இலவச பாடநூல்கள் நாளை 7ஆம் திகதியும் மறுதினம் 8ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

வலிகாமம் வலய பாடசாலைகளுக்குத் தேவையான பாடநூல்கள் கிடைக்கப்பெறாமையால் ஏனைய கல்வி வலயங்களில் இருந்து பாடநூல்கள் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

கடந்தவாரம் யாழ்ப்பாண வலயத்தில் இருந்து பெறப்பட்ட நூல்கள் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டன.

இவ்வாரம் வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயங்களில் இருந்து 9000 பாடநூல்கள் வலிகாமம் வலயத்துக்கு எடுத்துவரப்பட்டு வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளும் தாம் விண்ணப்பித்த விவரத்துக்கமைய தமக்குரிய பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும், குறித்த காலத்தில் பொறுப்பான ஆசிரியர்களை அனுப்பி தவறாது பாடநூல்களைப் பெற்று விநியோகிக்குமாறும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வைத்து பின்வரும் ஒழுங்கில் பாடநூல்கள் வழங்கப்படும்.

நாளை வியாழக்கிழமை காலை உடுவில் கோட்டம் ,மாலை தெல்லிப்பழைக் கோட்டம்.

8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சண்டிலிப்பாய்க் கோட்டம், மாலை சங்கானை கோட்டம்.

(க-152)

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## 2002ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம், வாகன, மிருக வரி உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் 2002ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தை எதிர்வரும் 31.03.2002ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும். கடந்த காலங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத்தவறியோர்மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2002.03.04*

(C/20958)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# பொன்விழா போட்டிகள்

**கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா ச.ச.நிலையத்தின்**
பொன்விழாவை முன்னிட்டு *பின்வரும் போட்டிகள் எம்மால் நடத்தப்படவுள்ளன.*

* மென்பந்து கிரிக்கெட் - 9 பேர் கொண்ட 12 ஓவர்
* கரபந்து - 6 பேர் கொண்ட ஓவர் கேம்
* மரதன் ஓட்டம் (ஆண்) - 10 மைல்

விண்ணப்ப முடிவு திகதி:- 2002 - 03 - 14
விண்ணப்பங்கள் கிடைக்குமிடம்:- ஸ்ரீ காந்தா புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். - செயலாளர்

(1351)


விற்பனையில் முதலிடத்தில்

# நிப்போன்

முற்றிலும் தானியங்கியான இன்வேட்டர்கள்




புகை
சத்தம் இல்லை
எரிபொருட் செலவு

ரூ.10,990 க்கு மேல் 10% கழிவு

**உயர் தொழில்நுட்பம் வாய்ந்த முற்றிலும் தானியங்கி *நிப்போன் இன்வேட்டர்* இருந்தால் நீங்கள் மின்சாரமின்றி ஒருபொழுதும் இருக்கும் அவசியமிராது.**

கேள்வி : **ஒரு இன்வேட்டர் என்பது என்ன?**

பதில் : ஒரு இலத்திரனியல் சாதனம். பற்றரி ஒன்றினுள் தேக்கப்பட்டிருந்த DC மின் வலுவை வீட்டுப்பாவனைக்கான AC மின்னாக மாற்றித்தருகிறது.

மின்வழங்கல் நின்றவுடன் நிப்போன் இன்வேட்டர் உடனே செயற்பட்டு தடங்கலின்றி மின்சாரத்தை தொடர்ந்து வழங்குகின்றது.

அது போலவே, மின் வழங்கல் இயல்பு நிலைக்கு திரும்பியதும் தானியங்கியாக செயற்பட்டு செயலிலிருந்து ஓய்வடைந்து விடுகிறது. ஆயினும்தொடர்ந்து பற்றரிக்கான மின்னேற்றமும் தொடங்கி விடுகிறது.

2 அடி நீள அவசர நிலை லைட் (AC/DC) ரூ.1490



விசிறியும் லைட்டும் அடங்கிய பெட்டி (AC/DC) ரூ.3300

# லங்கா நிப்போன்

10, ட்றிலோனி பிளேஸ் (பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டி சந்தி, கொழும்பு -04. தொ.பே: 589992, 582365

*Fully-Automatic Nippon Inverter fit and forget system.*

# கூலிக்கு மாரடிக்கும் கும்பல் சால்வை அணிவது ஏனோ?

## அமைச்சர் மகேஸ்வரன் சூடான கேள்வி

"கூலிக்கு மாரடிக்கும் கும்பல்கள் சால்வை போடுவது தன்மானம் உள்ள தமிழர்களை அவமானப் படுத்துவதுபோலாகும் எனவே, சால்வையைக் கழற்றி எறியுங்கள்" என ஜே.வி.பி. உறுப்பினர் மீது சீறிப் பாய்ந்தார் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில பேச்சுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

முன்னைய அரசின் கைக்கூலியாக லக்ஷ்மன் கதிர்காமரும், கூலிப் படையாக டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியினரும் செயற்பட்டனர். மக்கள் இன்று அவர்களை ஓரங்கட்டிவிட்டனர்.

இப்போது இருவர் மட்டுமே மிஞ்சி உள்ளனர். ஒருவர் தாடியுடன், மற்றவர் தடியுடன். இவர்களும்கூட மக்களின் விருப்பு வாக்குகளால் வரவில்லை.

வங்கியில் பணமில்லாமல் ஜனாதிபதி சந்திரிகாவினால் வழங்கப்பட்ட வெற்றுக் காசோலைகளின் மூலம் மக்களை ஏமாற்றியே இவர்கள் வந்துள்ளனர். அன்றைய அரசினால் வழங்கப்பட்ட 400 தன்னியக்க துப்பாக்கிகளுடன் இவர்கள் ஆடிய ஆட்டமும், அடாவடித்தனமும் மக்கள் அறிந்ததே.

அதேபோன்று ஜே.வி.பி. இவ்வாதிகளின் குரலாக ஒருவர் இங்கு ஒலிக்கின்றார். அவரும் ஒரு தமிழரா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஜே.வி.பி. செயலாளர் விமல் வீரவன்சவின் பாடங்களை இவர் தனது குரலில் இங்கு ஒலிபரப்புகின்றார். அவர்கள் புறக்கோட்டையில் வாங்கிக் கொடுத்த சால்வையைப் போட்டுக்கொண்டு இங்கே வந்து போக்குக் காட்டுகின்றார் அவர். எங்களோடு சேர்ந்து வந்தால் இதைவிடத் திறமான சால்வை வாங்கிக் கொடுத்திருப்போம். தன்மானம் உள்ள மனிதர்கள் மட்டுமே அணியவேண்டிய சால்வையை இவர்கள் அணிவது வெட்கக்கேடு. அதைக கழற்றி உங்கள் தலைவரின் கழுத்தில் போடுங்கள். பிரதமர் புலிகளுடன் செய்துள்ள ஒப்பந்தம் வெற்றி அளிப்பது உறுதி.

அப்போது எங்கள் பின் உங்கள் தலைவரும் சால்வையைப் போட்டுக் கொண்டு வர உதவியாக இருக்கும். நயவஞ்சகமான ஏழுவருட ஆட்சி இருண்ட வாழ்க்கையாகவே இருந்தது. அவர்கள் மேலும் ஓர் ஐந்து வருடம் ஆட்சி செய்திருக்க முடியும்.

ஆனால் ஜே.வி.பியுடன் சேர்ந்ததால் ஒரு வருடத்தில் ஓரம் கட்டப்பட்டுவிட்டனர். இதை பொ.ஜ.முன்னணியினர் உணரவேண்டும்.

இன்று நாட்டு மக்கள் அனைவரும் வேண்டுவது நிரந்தர சமாதானம். அதைத்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்த முனைகிறார்.

நோர்வே பல்லின மக்கள் வாழும் ஒரு ஜனநாயக நாடு. அங்கு வாழும் மக்கள் அனைவரும் சமமாக வாழ்வது போல் இங்குள்ள மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்று கருதுவதில் எந்தவிதமான தவறும் இல்லை.

ஆனால், ஜே.வி.பியினரோ இங்கு இரத்த ஆறு ஓடவில்லையே என ஏங்குகின்றனர். அவர்களுடைய திட்டம் பலிக்காது. புலிகளும் பிரதமரும் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவது உறுதி - என்றும் அமைச்சர் மகேஸ்வரன் கூறினார்.

# அரச படைகளுக்கு புலிகள் உயிர்ப்பிச்சை; ஒப்பந்தத்தினால் கிடைத்த பலன் அதுவே

## ஜே.வி.பியின் எம்.பி. வீரவன்ச கூறுகிறார்

"அரச படைகளைக் கொல்லமாட்டோம் எனப் புலிகள் உயிர்ப்பிச்சை கொடுத்துள்ளனர். இது ஒன்றுதான் இந்த ஒப்பந்தம்மூலம் கிடைத்துள்ளது. அதேவேளை இலங்கை அரசு புலிகளை அங்கீகரிக்கப்பட்ட ஓர் இராணுவமாக ஏற்றுக்கொண்டுள்ளது."

- இப்படி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது பொங்கு தமிழ் விழா கொண்டாடப்படுகின்றது. அமைச்சர்களான சந்திரசேகரன், நூர்தீன் மற்றும் மனோ கணேசன் போன்ற அரச பிரதிநிதிகள் அவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். அமைச்சர் சந்திரசேகரன் பிரபாகரனின் படத்தை திரைநீக்கம் செய்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கின்றார்.

பொங்கு தமிழ் விழா என்பது பிரபாகரன் தலைமையிலான தமிழீழம் என்பதை உறுதிப்படுத்துவதே. இந்த விழாவில் அமைச்சர்கள் கலந்து கொண்டு தமிழீழத்தை அங்கீகரிக்கின்றார்களா?

ஒப்பந்தத்தின் மூலம் எல்லைகள் பிரிக்கப்பட்டுவிட்டன. இந்த ஈழப்போர் இன்றோடு ஒழியாது மேலும் பல யுத்தங்கள் தொடரும் அபாயம் உண்டு.

ஈழப்போர் நாளை எல்லைப் போராகவும் பின் நாட்டுப் போராகவும் தொடரும். இன்று தமிழீழம் கேட்பவர்கள் நாளை மலைநாட்டையும் பிரித்துக் கேட்டு யுத்தம் தொடுக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வவுனியா சென்றார். அங்கே பிரபாகரனைக் கண்டாரா? பிரபாகரன் ஈழத் தமிழ் நாட்டின் வரைபடத்தின் பின்னணியில், ஈழக்கொடியுடன் அமர்ந்து கையொப்பம் இடுகிறார். ஆனால் பிரதமர் எங்கோ ஒரு மூலையில் இருந்து ஒப்பம் இட்டுள்ளார். இது மிகவும் வேதனைக்குரியது.

கனடாவில் இருந்து வெளியாகும் 'உலகத் தமிழன்' என்ற தமிழ் ஏடு இருநாட்டுத் தலைவர்களுக்கு இடையிலான ஒப்பந்தம் இது என்று எழுதி உள்ளது. அப்படியானால் சர்வதேச மட்டத்தில் நாட்டைப் பிரித்துவிட்டீர்களா?

இப்பொழுது கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம்மூலம் மறைமுகமாக தமிழ்நாட்டுக் கோரிக்கைக்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளது. இதை அரசு மூடி மறைத்துவிட்டது.

இந்த உண்மைகள் வெளிப்படும்போது நாட்டில் மேலும் பல குழறல்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் இருக்கும் - என்றார். (ஐ)

# புலிகளின் நேர்மையின் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள்!

கொழும்பு,மார்ச்6

தமிழீழ விடுதலைப் புலிகள் போர் முனையில் சண்டையிடுவதில் மட்டுமல்ல ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் தலை சிறந்தவர்கள்; நேர்மையானவர்கள். எனவே புலிகள் மீது சந்தேகம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. இப்படி தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரம் எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அடித்துக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்கு தான் ஒத்துழைப்பு வழங்குவதாக வெளியில் கூறிக் கொள்கிறார்.

அவர் பேச்சிலும், எழுத்திலும் காட்டுவதை முழுமனதுடன் செயலிலும் காட்ட வேண்டும். பிரதமரின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சர்வதேச நாடுகள் ஒரேயடியாக வரவேற்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான்கூட பாராட்டி உள்ளார்.

உண்மை நிலை இப்படி இருக்க, இங்கு உள்நாட்டில் உள்ள சில தீய சக்திகள் குட்டையைக் குழப்ப முயல்கின்றன.

1995ஆம் ஆண்டு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை ஜனாதிபதியும் அறிவார்.

நாட்டின் அமைதியை விரும்புவதாகக் கூறும் ஜனாதிபதி, தாமாகவே முன்வந்து சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் வைத்திருக்க வேண்டும். தன்னிடம் கலந்து பேசவில்லை, தன்னிடம் கேட்கவில்லை என்ற ஒரே காரணத்தால் பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடக்கூடாது - என்றார். (ஐ)




# பொங்கு தமிழ் விழாக்களுக்கு தவறான சாயம் பூசாதீர்கள்!

## ஜோசப் பரராஜசிங்கம் கோரிக்கை

தமிழ்மக்கள் சகல இனத்தவர்களுடனும் இணைந்து சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர். இதை வெளிப்படுத்தவே பொங்கு தமிழ் விழாக்களும், சாமாதனப் பேரணிகளும். அவற்றுக்குத் தவறான சாயம் பூசித் திசை திருப்ப முயன்றால் விளைவு விபரீதமாகும். தொடர்ந்து போராடவும் தமிழர்கள் தயங்கமாட்டார்கள். இப்படிச் சூளுரைத்தார் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இந்த நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்படுவதை விரும்பாத ஜே.வி.பியினர் இங்கு மீண்டும் ஓர் இரத்தக் களரியை உருவாக்க முனைகின்றனரா என்று கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புரையோடிப் போன இனப்பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான ஒரு முடிவு காண வேண்டும் என்ற நோக்குடன் பிரதமர் செயற்படுகின்றார்.

இந்த நாட்டு மக்கள் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவ்வளவு அக்கறையும், கவலையும் உள்ளதோ அதேபோன்று இங்கு வாழும் தமிழர்கள் மீது விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனுக்கு அக்கறையும், கவலையும் உண்டு.

சர்வதேசரீதியில் இங்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின்படி 80 சதவீதமானவர்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அன்று ஆட்சியைக் கைப்பற்றவும அதிகாரத்தைப் பிடிப்பதற்கும் ஆயுதம் ஏந்திய ஜே.வி.பியினர் இன்று மறுக்கப்பட்ட தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடும் புலிகளைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது. ஜே.வி.பியினர் தாம் உமாமகேஸ்வரனிடம் யுத்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

இங்கு பேசிய எதிரணியினர் பொங்குதமிழ் விழா பற்றி தவறாக வியாக்கியானம் செய்து கொச்சப்படுத்த முனைந்தனர். இது உண்மை விளங்காதவர்களின் அறியாமைப் பண்பு.

பொங்குதமிழ் விழா சமாதானத்தை வலியுறுத்தும் - ஐக்கிய உணர்வை ஏற்படுத்தும் - ஒரு விழாவாகவே அமைந்திருந்தது.

அங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனி நாட்டுக்கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. தமிழீழக் கோரிகையும் முன்வைக்கப்படவில்லை. தம்பி பிரபாகரன் கூட மாற்றுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

நாங்கள் இன்று பொங்குதமிழ் விழாவின் மூலம் சமாதானப் பேரணிகளை நடத்துகின்றோம். அமைதியை விரும்புகின்றோம். அதனால் நாம் பலவீனமானவர்கள் எனக் கருதிவிடக் கூடாது. எனவே ஜே.வி.பியினர் உட்பட அனைவரும் நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஆதரவளிக்கவேண்டும் - என்றார். (ஐ)

## முன்னர் பதிவு செய்யத் தவறியவர்கள்

# பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை வெள்ளியன்று இலவசமாகச் செய்யலாம்

வலி.கிழக்கு,மார்ச்6

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களுக்கு இலவசப் பதிவுகள் மேற்கொள்வதற்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் இப்பதிவுகள் நடைபெறவுள்ளன.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவலகருடன் தொடர்புகொண்டு தேவையான ஆவணங்களுடன் நாளைமறுதினம் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (க-180)

# உடன்படிக்கையை எதிர்த்து 'சிஹல உறுமய' பல மனுக்கள்

கொழும்பு,மார்ச்6

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு 'சிஹல உறுமய' மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வுக்கு எதிராக 'சிஹல உறுமய' பல மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் தாக்கல் செய்துள்ள மனுவிலேயே பிரபாகரனை பிரதிவாதியாகக் குறிப்பிட்டுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் திலக் கருணரத்ன தெரிவித்துள்ளார். (ஐ-3-ரி)

## வருடாந்தத் திருவிழா 10ஆம் திகதி

# கச்சதீவு யாத்திரைக்கு 3 தினங்கள் நெடுந்தீவில் இருந்து படகுச் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்6

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு அங்கு யாத்திரிகர்கள் சென்று வருவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதால் யாத்திரிகர்களின் நலன்கருதி மூன்று தினங்கள் நெடுந்தீவிலிருந்து படகுச்சேவை நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடற்படையினருடன் தொடர்புகொண்டதையடுத்து கடற்படையினர் இந்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. 10ஆம் திகதி திருநாள் திருப்பலி காலை 7மணிக்கும் 10மணிக்கும் நடைபெறும்.

நெடுந்தீவிலிருந்து விசேட படகுச் சேவைகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கமும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறுதிப் படகுச் சேவை காலை 5 மணிக்கும் நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் காலை 10 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து புறப்படும் வழமையான படகுச் சேவை மூலம் நெடுந்தீவுக்குச் சென்று அங்கிருந்து கச்சதீவுக்குச் செல்லாம்.

இதேவேளை -

யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான உணவு, குடிதண்ணீர், தங்குமிடம் அமைப்பதற்குத் தேவையான உபகரணங்களைத் தாமே கொண்டு வரவேண்டும். இது ஒரு பக்திபூர்வ யாத்திரை இதனைச் சுற்றுலா நோக்குடனோ, கேளிக்கை நோக்குடனோ, உல்லாசப் பயணமாகவோ கலந்து கொள்ளவேண்டாம்.

- இவ்வாறு பங்குத்தந்தை அருட்திரு. எம். எல்.மொன்பேட் அடிகள் கேட்டுள்ளார்.

அத்துடன் மதுபானங்கள், வானொலிப்பெட்டிகள், இசைக்கருவிகள் என்பன கொண்டுசெல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவுத் துறைமுகத்தில் யாத்திரிகர்களின் அனைத்துப் பொதிகளும் சோதனை செய்த பின்பே படகில் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும், கச்சதீவு புனித அந்தோனியாரின் ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும், புனிதமாகவும், சுகாதாரமாகவும் பேணும்படியும் அவர் வேண்டியுள்ளார்.

இதனிடையில் -

கச்சதீவு செல்ல இருக்கும் யாத்திரிகர்களுக்கான மலசலகூட வசதிகளையும் ஏனைய வசதிகளையும் கவனிக்கும் பொருட்டு யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக ஆலய மூப்பர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்துள்ளார். (க-8-111)

# யாழ்.பல்கலை. பட்டமளிப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி நடக்கும்

## 600 பேருக்குப் பட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ்.பல்கலைக்கழகத்தின் 21 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஐந்து அமர்வுகளாக இடம்பெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவில் 626பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாவது அமர்வு காலை 10.30 மணிக்கும், மூன்றாவது அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும், நான்காவது அமர்வு பிற்பகல் 1.30 மணிக்கும், ஐந்தாவது அமர்வு பிற்பகல் 3.00 மணிக்கும் இடம்பெறும்.

முதல் அமர்வில் 130 பேருக்கும், இரண்டாம் அமர்வில் 138 பேருக்கும், மூன்றாம் அமர்வில் 113 பேருக்கும், நான்காம் அமர்வில் 132 பேருக்கும், ஐந்தாம் அமர்வில் 113 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்படும்.

இந்த 626 பட்டங்களில் தொழில் நிர்வாகமாணி, முதுதத்துவமாணி, முதுமெய்யியல்மாணி, வணிகமாணி, விவசாய விஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி, மருத்துவமாணி, சத்திர சிகிச்சைமாணி, நுண்கலைமாணி, கலைமாணி, முதுகல்வியியல்மாணி என்பன அடங்குகின்றன.

அத்துடன் முதலாவது அமர்வில் பிரபல எழுத்தாளரும் மூதறிஞருமான க.சொக்கலிங்கம் (சொக்கன்) கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிதம்பரநாதன் கலாநிதிப் பட்டம் பெறவுள்ளார்.(க-10-ரி)

---

### பொலீஸ் அதிகாரி அறிவிப்பு:

# பஸ் மிதிபலகையில் நின்று பயணம் செய்யாதீர்கள்!

## பிடித்தால் சாரதி, நடத்துநருக்கும் அபராதம்!!

யாழ்ப்பாணம்,மார்ச்6

போக்குவரத்துச்சபை பஸ் மற்றும் மினிபஸ்களில் மிதிபலகைகளில் நின்று பயணம் செய்யாதீர்கள்! அவ்வாறு பயணிகள் சென்றால் சம்பவ இடத்தில் வைத்தே குறிப்பிட்ட வாகனத்தின் சாரதிக்கும், நடத்துநருக்கும் அபராதம் விதிக்கப்படும்.

இவ்வாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார் யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி உடுவெல.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மிதிபலகைகளில் நின்றவாறு பயணிப்போரினால் அண்மைக்காலத்தில அதிகளவான விபத்துச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை பொலீஸாரினால் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்விடயம் தொடர்பாக அதிக கவனமெடுத்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொலீஸார் தயாராகி வருகின்றனர். வெகுவிரைவில் இந்த நடவடிக்கை ஆரம்பமாகிவிடும்.

குறிப்பிட்ட பஸ் பொலீஸாரால் வழிமறிக்கப்பட்டு, அந்த இடத்திலேயே சாரதிக்கும் நடத்துநருக்கும் குறைந்தது 100 ரூபா அபராதம் விதிக்கப்படும் - என்றார் அந்த பொலீஸ் அதிகாரி.

பாடசாலை மாணவர்களே அதிகளவில் இவ்வாறு பயணம் செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுச் சொன்னார். (க-9)

---

### நாகர்கோவிலில் கைதுசெய்யப்பட்ட

# இந்திய மீனவர் 12 பேருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்6

கடந்தமாதம் 17ஆம் திகதி நாகர் கோவில் கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களின் வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் அறிவித்தல் வரும்வரை இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவரும் கடந்த மாதம் 19ஆம் திகதி ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-10)

---

# சாவகச்சேரியில் எரிபொருள் நிலையம் விரைவில் இயங்கத் தொடங்கும்

## ப.நோ.கூ. சங்கம் நடவடிக்கை

தென்மராட்சி,மார்ச்6

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையம் ஓரிரு தினங்களில் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்குரிய குறிப்பிட்ட தொகைப் பணம் சங்கத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் வந்து சேர்ந்ததும் விநியோகம் ஆரம்பிக்கப்படுமெனவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் நிலையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நிலைய சுற்றாடல் பகுதி அண்மையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தினால் துப்புரவு செய்யப்பட்டதாகவும் பெற்றோல், டீசல் விநியோக மீற்றர் பெட்டிகள் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளதால் புதிய மீற்றர் பெட்டிகள் பொருத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைக் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

---

## தேவாவின் 51ஆவது அகவை



மார்ச் 10இல் 51ஆவது அகவையைக் கொண்டாடும் உயர்திரு. க.தேவராஜா
(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

சாந்தமே சரீரமாய் சாற்றிடும் வேந்தராய்
மாந்தர்கள் மதித்திடும் மணிமொழிச் செல்வனாய்
சேந்தனே சேற்றினில் முளைத்திடும் முத்தமாய்
காண்டமே படைத்திடும் காவிய நாயகன் களிப்போடு வாழி!

திரு.சண்.வாமதேவன்
(அதிபர் - ய/சோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்)

---

## புதிய....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்டெப் இன் இனோவேடிங் மொபிலிட்டி' என்பதன் சுருக்கமே 'அசிமோ' என்பதாகும்.

இது முழுக்கமுழுக்க ஒரு விண்வெளி வீராங்கனையைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. புத்தகப் பையைச் சுமந்து செல்லும் பாடசாலை மாணவனைப் போன்று காட்சி தரும் இந்த ரோபோ சுமார் 43கிலோ எடை கொண்டது.

'அசிமோ'வின் நடை(உடை?) பாவனை எல்லாம் மனிதனைப் போன்றே இருக்கும். இந்த ரோபோக்களால் சுலபமாகத் திரும்பவும் குனிந்து நிமிரவும் முடியும்.

வீடுகளில் உங்களுக்குத் தேவையான சின்னச் சின்ன உதவிகளைச் செய்யக்கூடியவாறு இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

சொனி நிறுவனம் தயாரித்த ரோபோவின் பெயர் 'அய்போ'. இதன் அமைப்பு உங்களின் செல்ல நாய்க்குட்டி போன்று இருக்கும். அவ்வளவு சிறியது. இந்த ரோபோ உங்கள் வாயிலிருந்து வெளிவரும் 75 வார்த்தைகளைப் புரிந்துகொள்ளும்(பகுத்தறிந்து கொள்ளும்) சக்தி கொண்டது.

'அய்போ'வின் தலையில் பொருத்தப்பட்டுள்ள 'சென்சார்' கருவிகள் இதற்கு தொட்டுணர்வையும் வழங்குகின்றன. ஆனால் எல்லா பொருள்களையும் இதனால் தொட்டு உணர முடியாது. ஏற்கனவே(புரோகிறாம்) நிகழ்ச்சித் திட்டம் செய்யப்பட்ட பொருள்களை அது தொட்டு உணர்ந்து கொள்ளும். தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்த்து, அது தனது உருவம்தான் என்பதைப் புரிந்து கொள்ளும் நுண்ணிய திறனும் 'அய்போ'வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நடனமாடுவதிலும், கால்பந்து விளையாடுவதிலும் 'அய்போ' ரோபோக்கள் தனித் திறன்படைத்தவை. வீட்டு வேலைகளுக்கும் நம்பகமானவை.

அதனால்தானோ என்னவோ 'அய்போ' ரோபோவிற்கு ஜப்பானிய இளைய தலைமுறையினரிடையே பெரும் வரவேற்புள்ளது.

இதுவரை ஒரு லட்சத்துக்கும் அதிகமான 'அய்போ' ரோபோக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்கிறது சொனி நிறுவனம்.

அதுசரி ஜப்பானியர்களிடம் இந்த ரோபோ மோகம் ஏன் வந்தது?

அந்த நாட்டின் குழந்தைகளின் பிறப்பு வீதம் மிகவும் குறைந்துவிட்டது. அதேசமயம் ஜப்பானியர்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரிக்கின்றது. இதனால் அங்கு முதியோர்களின் எண்ணிக்கை அதிகளவாக உள்ளது. அவர்களுக்கு வீட்டு வேலைகளில் உதவவும் மற்றைய வேலைகளைச் செய்யவும் ஆள் கிடைப்பது குதிரைக்கொம்பாகிவிடுகின்றது.

இதற்கென வெளிநாடுகளிலிருந்து வேலையாள்களை இறக்குமதி செய்தால் அவர்களுக்கு நிறையச் சம்பளம் கொடுக்கவேண்டியுள்ளது.

எனவே குறைந்த செலவில் தமக்கு 24 மணிநேரமும் சேவை செய்யக்கூடிய ரோபோக்களை ஜப்பானியர்கள் நாடத் தொடங்கிவிட்டனர்.

---

# சமாதான தீபம் ஏற்றல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்6

சமாதான நடவடிக்கைகளை வரவேற்றும் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டியும் நாளைமறுதினம் நாடு முழுவதும் இடம்பெறவுள்ள 'சமாதான தீபம்' ஏற்றல் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று மாலை 4மணிக்கு கோயில் வீதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அ.கி. சிவசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (3-10-8)

---

## வாசகர் திருமுகம்

# பொதுச்சுகாதாரச் சீரழிவு பற்றிய விழிப்புணர்வு அவசியம்

தற்போது மலேரியா யாழ்.மாவட்டத்தில் பாரிய அளவில் பரவத்தொடங்கியுள்ளது. இதற்குப் போர்க்காலச் சூழ்நிலையால் ஏற்பட்ட தேடுவாரற்ற காணிகளில் பற்றைகள் அதிகரிப்பு, வெள்ளம், முன்பிருந்த மலத்தியோன் தடை ஆகியன காரணமாகக் கூறப்படுகிறது. மிக அண்மையில் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டாலும் சாதாரணமாக பாவிக்கப்படும் குளோரோகுயின் என்ற மருந்துக்கு இக்கிருமிகள் வளர்க்கப்பட்டு மாற்று மருந்து பாவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இப்பிரச்சினை உள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள ஒவ்வொரு பொது மருத்துவத்துறை விடுதியிலும் நாளொன்றுக்கு ஏறக்குறைய 10 தொடக்கம் 15 நோயாளர்களுக்கு மேற்படி மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. வைத்தியசாலையில் மொத்தமாக உள்ள ஆறு விடுதிகளையும் (குழந்தை வைத்தியப் பிரிவு உட்பட) கணக்கில் எடுத்தால் ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய நூறு நோயாளர்களுக்கு வைத்தியம் அளிக்கப்படுகிறது. அத்துடன் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் முன்பு நாளொன்றுக்கு 80தொடக்கம் நூறு மலேரியா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தும் தற்போது பத்துத் தொடக்கம் இருபது நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

மேற்கூறிய காரணங்களினால் வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் பொதுச் சுகாதாரம் கவனமாகப் பேணப்பட வேண்டும். மேலும் நாளொன்றுக்கு முப்பது நெருப்புக் காய்ச்சல் நோயாளர்களுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. அத்துடன் மிகக்கொடிய டெங்குக் காய்ச்சலும் மிகச் சமீபமாக காலமாக யாழ்ப்பாணத்தில் பரவ ஆரம்பித்துள்ளது.

வைத்தியசாலைக்குள்ளும் அதனை அண்டிய யாழ். பெரிய கடைப் பகுதி வாய்க்கால்களில் கழிவுநீர் ஓட்டம், மண், சேறு, கடதாசி, இலை, குப்பை போன்றவற்றினால் அடைபட்டு நுளம்பு பெருக அதிக வாய்ப்பளிக்கின்றது. முக்கியமாக வாய்க்கால்களுக்கு மேல் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கும் சிமெந்து தட்டின்கீழ் இந்த அடைப்பு பலமாதங்களாக ஏன் வருடங்களாக நிரந்தரமாக இருக்கின்றது. இதனால் மிகக்கொடிய குளோரோகுயினுக்குப் பழக்கப்பட்ட மலேரியாவையும் டெங்குக் காய்ச்சலையும் நெருப்புக் காய்ச்சலையும் நுளம்பு, இலையான் பெருக்கத்தினால் பரப்பும் ஒரு ஸ்தானமாக யாழ்நகரம் எதிர்காலத்தில் மாறலாம்.

இதனைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலை நிர்வாகம் யாழ்.மாநகரசபை நிர்வாகம் - பொதுச் சுகாதாரக் குழு, சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? வீதிகளில் இருக்கும் பற்றைகள் குப்பைகள் கிரமமாக அகற்றப்படுதல் மேலும் இதனைச் சீராக்கும். அநாதரவான காணிகளில் இருக்கும் பற்றைகளை காணிச் சொந்தக்காரர்களைக்கொண்டு அகற்றவேண்டும். இக் காணிச் சொந்தக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டால் மாநகரசபை நிர்வாகம் முன்பு செய்தது போல் தனது செலவில் இப்பற்றைகளை அகற்றினால் என்ன?

மேலும் மழைக்குமுன்பு பெரிய வாய்க்கால்களை சுத்தம் பண்ணும் பணி இம்முறை நடைபெறவில்லை. இதனால் இங்கு மழைநீர் தேங்கி நிற்கின்றது. மேற்கூறிய விடயத்தை சபை உடனடியாகத் தனது கூட்டத்தில் எடுக்குமா?

ஒரு பிரஜை

---

# 'கிளினிக்' மருந்துச் சரைகளால் நோயாளர்கள் தடுமாற்றம்

வைத்திய கலாநிதிகள் எப்படி ஒரு நோயாளியைப் பரிசோதித்து மருந்து எழுதுகிறார்களோ அதே அளவு பொறுப்பு அதாவது நோயாளி ஒழுங்காக மருந்தை உட்கொள்வதற்கு உதவும் மருந்தாளர் சேவையும் அமையவேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய நிலையத்தில் ''கிளினிக்'' காலை நேரத்துடன் சென்று 'கொப்பி' வைத்தால்தான் மருந்து பெற்று மத்தியானம் சாப்பாட்டு நேரத்திற்கு வீடு வந்து சேரலாம். Medical Clinic இற்கு செல்பவர்கள் அநேகமாக 55 வயதைத் தாண்டிய முதியவர்கள் தற்போதைய வாழ்க்கைக் கணிப்பின்படி வாழ்நாளில் நான்கில் மூன்று பகுதியை அடைந்தவர்கள்

கால்கடுக்க நின்று பஸ்பிடித்து (இவர்களில் சிலரைக் கூட்டிச் செல்லவும் உதவி ஆள் வேண்டியிருக்கும்) ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும். டாக்டர் ஒழுங்காகப் பரிசோதித்து மாதம் ஒரு முறையோ, 15 நாள்களுக்கு ஒரு முறையோ வரக்கூடியதாக மருந்தை எழுதிவிடுவார். இதைக் கொண்டுபோய் மருந்து பெறும் இடத்தில் வரிசையில் நின்று மருந்தைப் பெறும்போது எல்லாம் பேப்பரில் சரை செய்யப் . கிட்டத்தட்ட ஒரே மாதிரியான வெள்ளைக் குளிகைகள் 5-6 சரைகள் க்கிப் போடுவார்கள்.

அத்துடன் அவர் மருந்து வழங்கும் பணி முடிந்துவிடும். வாங்கிய நோயாளி அதைப் பொத்திச் சுத்திக்கொண்டு வீடு வந்தால் அதை எப்படிப் போடுவதென்று தெரியாது. எண்ணிக்கையில் ஓரளவு பிடிக்கலாம் என்றாலும் எண்ணிக்கையும் சரியாக இராது. 'சும்மா' கையால் பொத்திக் கிள்ளி சரை செய்வதுதானே!

ஏதோ அடுத்த 'கிளினிக்' வரும் வரை தன்னால் இயன்றதைப் போட்டு முடிக்கிறார். சிலவேளைகளில் மிகுதியும் வரும். சிலவேளைகளில் இடையில் முடிந்துவிடும். தவிர இரவில் சலம் கூடுதலாகப் போவதற்கு பாவிக்கும் Lasix என்ற குளிசையை மாலையில் மாறிப் போடுவாரானால் இரவில் அடிக்கடி எழுந்து சலம் கழிக்கும் திண்டாட்டம் வேறு.

உள்ளூரில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் வெளிநோயாளர் பிரிவில் கூட்டுக்குளிகை 1-3 தரம், பெரிய வெள்ளைக் குளிகை 2-3 தரம் என்று சொல்லியாதல் கொடுப்பார்கள். இதை நோயாளி பாடமாக்கிக் கொண்டு வந்ததால் மருந்தைப் போடலாம். Medical Clinic இல் 5-6 வித குளிகைகள் என்ன செய்வது நோயாளியின் தலைவிதி அவ்வளவுதான். 'என்வலப்'பைக் கொடுத்து அதில் சரையைப் போட்டு எழுதிக் கொடுக்கச் சொன்னாலும் எழுதிக் கொடுக்க மறுக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில் கிளினிக்குக்கு "பெரிய கொப்பி - 1, சிறிய கொப்பி - 1, கொண்டுவா" என்று சொல்வது போல் 'என்வலப்'பும் கொண்டுவா என்றால் நிச்சயமாக நோயாளி கொண்டுவருவார். ஏனெனில் ஒரு மாதம் அவர் போடப்போகும் மருந்துமுறை நிச்சயப்படுத்தப்படுகிறதல்லவா?

இது வைத்திய கலாநிதிகளுக்கும் சமர்ப்பணம்! இனியாவது 'என்வலப்' கொண்டுவா என்று சொல்லி மருந்து கொடுப்பார்களா?

*இணுவில் மேற்கு.* அ.இரத்தினசபாபதி

# புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை படையினர் மீட்க முடியவில்லை என்பதே யதார்த்தம்!

## இது குறித்து யாரும் பேசுவதில்லை என்கிறார் பிரதமர்

**கொழும்பு,மார்ச்6**

**வடக்கு, கிழக்கில் பல பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவற்றை விடுவிக்க ஆயுதப் படைகளினால் இதுவரை முடியவில்லை. இந்த உண்மை நிலை குறித்து யாரும் பேசுவதில்லை. இதன்மூலம் மக்களை அரசியல்வாதிகள் முட்டாள்களாக்குகின்றனர்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில இவ்வாறு கூறினார்.**

அரசு - புலிகள் உடன்படிக்கை தொடர்பான விவாதத்தின்போது விசேட உரையாற்றிய பிரதமர் ரணில மேலும் கூறியதாவது:-

இந்நாட்டின் பிரஜைகளான நாம் அனைவரும் சமாதான நடைமுறையின் பங்குதாரர்களே. நாம் இங்கு என்ன கூறினாலும், செய்தாலும் அது ஒரு கோடியே 80 லட்சம் மக்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும. வடக்கு, கிழக்கில் நீடித்துவரும் மோதலுக்கு சமரச அரசியல் தீர்வுகாண அதே மக்களே இந்த அர கு ஆணை வழங்கியுள்ளனர். அது வடக்கு - கிழக்கு மோதலை முடிவுகுக் கொண்டு வருவதற்கான மக்கள் ஆணையாகும்.

அரசியல் தீர்வு காண்பதற்கான எமது அணுகுமுறை விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான கடந்தகால சமரசப் பேச்சுக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். திம்புப் பேச்சுக்கள் முதல் இந்த அனுபவத்தைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நாம் அனைவரும் இழைத்த தவறுகளை மதிப்பீடு செய்யவும் எனக்கு அவகாசம் கிட்டியது.

எனவே, இம்முறை எமது அணுகுமுறை ஒன்றின்பின் ஒன்றானதாக - தொடர் நடவடிக்கையாகவே இருக்கும்.

தமிழ் மக்கள் தொடர்பான மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கையாள்வதே முதல் நடவடிக்கையாகும். புலிகள் இயக்கத்துடனான முன்னைய சுற்றுப் பேச்சுக்கள் மனிதாபிமானப் பிரச்சினையிலேயே முடிவடைந்தன.

நாம் வித்தியாசமான ஓர் அணுகுமுறையை முயன்று பார்த்தோம். மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என கடந்த டிசெம்பர் தேர்தலில் ஐ.தே.முன்னணி மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

புதிய ஐதேமுன்னணி அரசு என்ற வகையில் இந்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்த நாம் முன்னுரிமை வழங்கினோம்.

வன்னிக்கான உணவுப் பொருள்கள் மற்றும் போக்குவரத்து மீதான கட்டுப்பாடுகளை நாம் தளர்த்திய போது இங்கு இரண்டு ஒருதலைப் பட்ச மோதல் தவிர்ப்புகள் இருந்தன. ஒன்று விடுதலைப் புலிகளின் மோதல தவிர்ப்பு மற்றையது அரசினுடையது.

இந்த இரண்டு மோதல் தவிர்ப்புப் பிரகடனங்களினதும் விதிகள், நிபந்தனைகள் வேறானவை.

பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் கூடுதல் உறுதியானதுமான யுத்தநிறுத்தம்.

அந்த மோதல் தவிர்ப்புகளுக்குப பதிலாக இப்பொழுது கொண்டுவரப் பட்டிருக்கிறது.

அடுத்த நடவடிக்கை பேச்சு குறித்து பேச்சு, அரசியல் சமரசப் பேச்சுக்கு அது வழிவகுக்கும். புலிகள் இயக்கத் தடை உட்பட தீர்க்கமான பிரச்சினைகள் இருப்பதால் அவை குறித்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இரண்டு தரப்பினராலும் ஆராயப்பட வேண்டியிருக்கிறது.

உறுதியான யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து அரசியல் சமரசப் பேச்சுக்கள் குறித்து உடன்பாடு ஏற்படவேண்டும்.

யுத்தநிறுத்தத்துக்கான உடன்பாடே பெப்ரவரி 22ஆம் திகதி செய்து கொள்ளப்பட்டது.

இந்தத் தேசிய முக்கியத்துவப் பிரச்சினைக்கு இறுதி அரசியல் தீர்வு காண்பதே அது நோக்காகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் சமாதானப் பாதையில் பாதித் தூரத்துக்கு அது எம்மை அழைத்துச் சென்றிருக்கிறது.

கடத்தல்கள், கப்பம் பெறுதல், துன்புறுத்தல்கள் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் இரண்டு தரப்பினரும் ஈடுபடுவதை உடன்படிக்கை தடுக்கிறது. வியாபாரிகளிடம் - முக்கியமாக முஸ்லிம்களிடம் இருந்து - கப்பம் வாங்குதல், கிழக்கில் ஆள்கள் கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதும் இதில் அடங்கும்.

நாடு முழுவதிலும் சிவில் நிர்வாகத்துக்கு அரசாங்கமே பொறுப்பு. இருந்தாலும் வடக்கிலும் கிழக்கிலும குறிப்பிடத்தக்களவு நிலப்பகுதியில் சட்டம், ஒழுங்கு தொடர்பாக எமக்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் இல்லை. புலிகள் இயக்க ஆயுதப் பிரிவுகள் அப்பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. கட்டுப்பாட்டை மீண்டும் பெற ஆயுதப் படைகளினால் இதுவரை முடியவில்லை.

இதுவே யதார்த்தம் என்பதை நாம அனைவரும் அறிவோம். ஆனால் அது குறித்துப் பேச நாம் விரும்புவதில்லை. நாம் மக்களை முட்டாள்களாக்குகிறோம். இந்த வழியில் நாம் நம்மையே முட்டாள்களாக்கிக்கொள்கிறோம்.

வட மாகாணத்தில் புலிகள் இயக்க ஆயுதப் பிரிவுகளினால் ஆதிக்கம் செலுத்தப்படும் பிரதேசங்களை முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் வரையறுக்கின்றன. 2001ஆம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பு அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் எமது கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களை அன்றைய அரசு முதல் தடவையாக ஒப்புக்கொண்டது.

இந்த மாகாணங்களில் எல்லைகளை வகுக்க இரண்டு தரப்பினருக்கும் கண்காணிப்புக் குழு உதவும். இவ்வாறான ஒரு நடவடிக்கையின்றி கிழக்கு மாகாணத்தில் போரிடுவோரைப் பிரித்துவைப்பது சாத்தியமில்லை.

இதன் எல்லைகளை வகுக்க நோர்வே கண்காணிப்பாளர்களுக்கு முழுப் பொறுப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று கூறுவது சரியானதல்ல - என்றார்.

*பிரதமரது இந்த உரையின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் உதயனில் தலைப்புச் செய்தியாக இடம்பெற்றிருந்தது.* (ஐ)

# பூநகரி - சங்குப்பிட்டி பாதை மறக்கப்பட்டுப் போனது ஏன்?

**ஆனையிறவு ஊடான தரைவழிப் பாதையைத் திறப்பது குறித்தே தற்போது எங்கும் பேச்சு.**

**இது குடாநாட்டுக்கான மற்றொரு பாதை குறித்த தகவல்.**

**முற்றுப்பெறாத நிலையில் உள்ள சங்குப்பிட்டி - கேரதீவு தாம்போதிப் பணிகள் (மகாதேவா தாம்போதி) முற்றுப்பெற்றால் யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 3 மணித்தியாலங்களில் மன்னார் சென்றடையலாம். இதன் மொத்தத் தூரம் 75 மைல்கள். இதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா ஊடாக மன்னார் செல்வதாயின் (138 மைல்கள்) சுமார் 6 மணித்தியாலங்கள் தேவைப்படும். மேலும் இந்தப் பாதை முற்றுப்பெறின் யாழ்ப்பாண - வன்னி மக்களுக்கு அது வரப்பிரசாதமாக அமையும். இது குறித்த விவரங்களைத் தருகிறார் பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவர் கா.கார்த்திகேசு.**

பூநகரி - சங்குப்பிட்டி - கேரதீவு வழியாக போக்குவரத்துப் பாதை அமைக்கப்பட வேண்டும் என முதலில் இலங்கை நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாலசிங்கம் ஆவார். பொது மராமரத்து இலாகா பிரதம பொறியியலாளராக இருந்த மகாதேவா என்பவரால் 1935ஆம் ஆண்டு மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அவருடைய பெயரால் 'மகாதேவ தாம்போதி வேலைத் திட்டம்' (MAHADEVA CAUSEWAY) என இது அழைககப்படலாயிற்று. ஆழம் குறைந்த, பூநகரி - சங்குப்பிட்டிக் கடல் ஏரியில் வீதி அமைக்கப்பட்டு கடல் இடைவெளி குறைக்கப்பட்டது. யாழ்.குடாநாட்டில் அறுகுவெளி முனையான கேரதீவிலும், பூநகரி பரமன்கிராய் முனையான சங்குப் பிட்டியிலும் சிறு துறைகள் அமைக்கப்பட்டு கடல் இடைவெளியில் பாதை (FERRY) வள்ளச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### அமைச்சரின் பணிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் உள்ளூராட்சி சபைகள் அமைச்சராக இருந்த பிரேமதாஸா நேரடியாகக் கேரதீவு - சங்குப்பிட்டிக்கு விஜயம் செய்து தாம்போதி வேலைகளைத் துரிதப்படுத்தும்படி அதிகாரிகளைப் பணித்தார். தாம்போதி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன. இக்காலகட்டத்தில் ஆனையிறவு உப்பளத்தின் உப்புச் செய்கை இக் கடல்வழியை மூடுவதால் பாதிப்படையும் என ஒரு கருத்து முன்வைக்கப் பட்டது. இது ஆதாரமற்றது என ஆய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டின. கடல் நீர் ஓட்டத்தைத் தடைசெய்யாமல் போதியளவு பாரிய கொங்கிறீட் குழாய்களை வைத்து கேரதீவு துறைப் பகுதியில் 600 அடி நீளமான பாலம் அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டது.

சங்குப்பிட்டிப் பகுதி ஆழம் குறைந்ததாகும். சராசரி 10 அடி ஆழம் கொண்டது. கேரதீவு துறைப் பகுதி 14 அடி ஆழமுடையது. இதில் பாலத்தின் கீழாக வள்ளங்கள் போகக் கூடியதாய் அமைக்க திட்டமிடப்பட்டது.

அரச நிதியுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் யாழ்.மாவட்ட எம்.பிக்களும் மன்னார் எம்.பியும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கினர். கடல் இடைவெளியைக் குறைத்து, சங்குப்பிட்டி வீதியை நீட்டும் வேலை தொடரப்பட்டது.

### சிரமதானப் பணி

1982 காலப்பகுதியில் சில சமூக நிறுவனங்கள் இணைந்து வீதியமைப்பதில் சிரமதானப் பணியை மேற்கொண்டன. வீதியை நீட்டியதால் கடல் இடைவெளி குறுகியது. தற்போது சங்குப்பிட்டிக்கும் - கேரதீவிற்கும் இடையேயுள்ள தூரம் 1,300 யார் மட்டுமே. இதில் பாலம் அமைப்பதற்கான 200 யார் போக மிகுதி 1,100 யார் தூரம் மூடப்பட வேண்டியுள்ளது.

இப்பாதையில் தாம்போதி வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு - தரைவழி போக்குவரத்து திறக்கப்பட்டால் குடாநாட்டில் இருந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் செல்லும் தூரம் மிகவும் குறையும்.

குடாநாட்டுடன் வன்னி இணைக்கப்படும். வன்னியில் நிலப்பயன்பாடு அதிகரிக்கும் . குடாநாட்டு மக்களும் வன்னியில் விவசாய உற்பத்தியில் ஈடுபடுவர். வன்னிப் பெருநிலப் பரப்பில் குடாநாட்டு மத்தியதர வகுப்பினருக்கு வழங்கப்பட்ட காணிகளில் மீளப் பயிரிடப்படும். (உ+ம் - மரமுந்திரிச் செய்கை, பழ உற்பத்தி, தெங்கு).

வன்னிப் பிரதேச பிரதான விளை பொருளான நெல், குடாநாட்டில் சந்தைப் படுத்தப்படும். குடாநாட்டில் வன்னிப் பகுதி நெல்லை நம்பி இருககும் அரிசி ஆலைகள் தரமான குத்தரிசியை உற்பத்தி செய்யும்.

வன்னிப் பகுதியில் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி, காணியற்றவருக்கு நிலம் வழங்குவதன் மூலம், குடாநாட்டில் முடங்கி வாழும ஒரு பகுதியினரை வன்னிக்கு ஈர்க்க முடியும்.

## மகாதேவா தாம்போதித்திட்டத்தை மீளப் புதுப்பிக்க முடியாதா?

எவ்வகையில் பார்த்தாலும் வட மாகாணத்தில் இப் பாதை இணைப்பு பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது உறுதியாகும்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத தீவு ஆகிய தமிழ் மாவட்டங்களை யாழ். குடாநாட்டுடன் இணைக்கும் இப்பாதை மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. விவசாயம், கைத்தொழில், கடற்றொழில் என்பவற்றிலும் நல்ல அபிவிருத்தி காணமுடியும்.

மகாதேவா தாம்போதி வேலைத் திட்டம் குறித்து மீண்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கடந்த 12 வருடங்களாக கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை மூடப் பட்டிருக்கின்றது.

கடந்த காலத்தில் ஒரு லட்சம் வரையான இந்துக்கள் மகாசிவராத்திரிக்கு திருக்கேதீஸ்வரத்திற்கு பூநகரிப் பாதையூடாகவே சென்று வந்தனர். இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை நேரடி பஸ் சேவையினை யாழ்ப்பாணத்திற்கு நடத்தி வந்தது. 1990ஆம் ஆண்டு விமானத் தாக்குதலால் இப்பகுதியில் சேவையில் ஈடுபட்ட இரு பாதைகள் (FERRY) முற்றாகச் சேதம் அடைந்தன. 1990ஆம் ஆண்டுடன் இந்த வழியான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க முயலும் புதிய அரசின் காலத்தில் இப்பாதைக்கு விடிவு ஏற்படுவதாக! ★



அண்மையில் அல்லைப்பிட்டியில் வேலணை பிரதேச செயலர் பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் பொருள் காட்சியை யாழ். உதவி அரசாங்க அதிபரும் வலி. வடக்கு பிரதேச செயலருமான திருமதி ப.திலகநாயகம் போல் திறந்துவைத்துப் பார்வையிடுவதையும் வேலணை பிரதேச செயலர் எஸ்.இரத்தினம் , தையல் போதனாசிரியை த.ஜெயலட்சுமி உட்பட ஏனைய உத்தியோகத்தர்களையும் காணலாம்.

*(படம்: நெடுந்தீவு செய்தியாளர்)*

## மனனப் போட்டி

சுழிபுரம்,மார்ச்6

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனையை யொட்டி கந்தரனுபூதி மனனப் போட்டியை இவ்வாண்டும் நடத்துவதற்கு பஜனைச் சபையார் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அத்துடன் கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. (க-28)

## சாவகச்சேரி தபாலகம்

தென்மராட்சி,மார்ச்6

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் விரைவில் சாவகச்சேரியில் இயங்கவுள்ளபோதிலும், அஞ்சல் விநியோகம் மட்டுமே செயற்படுமென தெரிவிக்கப்பட்டது. (க-117)

## உடன்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச்6

புரிந்துணர்வு உடன்பாட்டை உடனடியாக ரத்துச்செய்யுமாறுகோரி 'தாய்நாட்டைப் பாதுகாக்கும் மாணவர் சங்கம்' என்ற அமைப்பைச் சேர்ந்தோர் கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் காலை நடத்தினர்.

பல்கலைக்கழக மாணவர்கள், பிக்குமார் எனச் சுமார் 150 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். (ஓ-3)

## தனியார் பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

அநுராதபுரம்,மார்ச்6

அநுராதபுரத்திலிருந்து கண்டி, கொழும்பு ஆகிய இடங்களுக்கான தனியார் பஸ் சேவைகள் நேற்று முன்தினம் நடைபெறவில்லை. இந்த பஸ் ஊழியர்கள் அன்று காலை திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

அநுராதபுரத்திலிருந்து கடந்த ஞாயிறு புறப்பட்ட தனியார் பஸ் ஒன்றின்மீது கெக்கிராவவில் வைத்து காடையர் கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியது. பஸ் சேதமடைந்ததோடு ஊழியர்கள் இருவரும் காயமடைந்தனர். இச்சம்பவத்தைக் கண்டித்தே ஏனைய தனியார் பஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறும் பட்சத்தில் அநுராதபுரத்திலிருந்து சேவையாற்றும் சில தனியார் பஸ் ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-6)

# கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தும் 'வீடியோ' படப்பிடிப்பு மோகம்

**பதிவாளர் என்றவகையில் தான் பங்கேற்ற திருமணம் உட்பட குடும்ப நிகழ்வுகளில் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் எண்ணங்களை இங்கு தொகுத்துத் தருகின்றார் காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளருமான ந.சதாசிவஐயர் அவர்கள்.**

சூடாநாட்டில் எந்த நிகழ்வாக இருப்பினும் இன்று அதில் முக்கிய இடம்பெறுவது வீடியோப் படப்பிடிப் பாகும். வீடியோப் படப்பிடிப்புக் காரணமாக எமது சமய நிகழ்வுகளில் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், கலாசாரச் சீரழிவுகள் ஏற்படுவதாகவும் பலர் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

நாகரிகம் வளர்ந்துவரும் இக்கால கட்டத்தில் மங்கல நிகழ்வுகளைப் பதிவுசெய்து வைத்திருக்கவும், அந் நிகழ்வில் பங்குபற்றாதோர் பின்னர் அதனைப் பார்த்து மகிழவும் வீடியோப் படப்பிடிப்பு அவசியமாகிறது. ஒரு மங்கல நிகழ்வுக்கு எப்படி மங்கலப் பொருள்கள் அவசியமோ - மந்திரங்கள், சடங்குகள் அவசியமோ - அதேபோல் வீடியோப் படப்பிடிப்பும் இன்று முக்கியமாகிவிட்டமை தவிர்க்கமுடியாததே. ஆயினும் இத் தவிர்க்கமுடியாத படப்பிடிப்பை எப்படி சடங்குகள், மரபுகள், சம்பிரதாயங்களுக்கு ஏற்ப அமைப்புடைய தாக்கலாம் என்பதை எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

### முக்கிய மூன்று பிரிவினர்

வீடியோப்படம் தொடர்பாக ஒரு மங்கல நிகழ்வை எடுத்துக்கொண்டால்; அந்த நிகழ்வில் மூன்று விதமான பங்களிப்புகள் சந்திக்கின்றன. ஒன்று, அந்நிகழ்வை நிறைவேற்றுபவர். அவர் பெரும்பாலும் அந்தணராக இருப்பார். (திருமணப் பதிவு ஆயின் பதிவாளர்) இரண்டாவது, அந்நிகழ்வில் சம்பந்தப்பட்டோர்; திருமணமாயின் மணமக்கள், பெற்றோர், சுற்றத்தவர். மூன்றாவது, வீடியோப் படப்பிடிப்பாளர்.

இங்கே முதலில் நிறைவேற்றுபவரான சிவாச்சாரியாரை எடுத்துக் கொண்டால் அவரே இந்நிகழ்வின் தலைமை நெறிப்படுத்துநரும், நிறைவேற்றுநரும் ஆவார். அவர் சமயக் கடமைகளை விதிக்கப்பட்டவாறு விக்கினமின்றி நிறைவேற்றும் கடப்பாடுடையவர். ஆதலால் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி நிகழ்வைச் சிறப்பாக்குதல் எல்லோரதும கடமையாகும்.

இரண்டாவதாக நிகழ்வில் சம்பந்தப்பட்டோர் மங்கல நிகழ்வுகள் பலவும் ஒழுங்கின்றி நடப்பதற்கு காரணகர்த்தாக்களாக அமைவோர் இவர்களே. மணமக்களின் நோக்கு, ஒன்றாக இருக்க, பெற்றோரின் நோக்கு வேறொன்றாக இருக்க, மங்கல வீட்டிற்குவரும் உறவினர் தமது தலைமைத்துவத்தை அங்கே நிலைநாட்ட அதனால் ஒரு, குழப்பமான சாம்பார் சடங்குகளே இப்போது பல இடங்களிலும் நடைபெறுவதைக் காணலாம்.

மூன்றாவதாக இடம்பெறுவது தற்போதைய வீடியோப் படப்பிடிப்பாகும். திரைப்படம் என்பது திட்டமிட்டுப் பலர் சேர்ந்து நடிப்பு, நெறியாள்கை, ஒலி, ஒளி, காட்சியமைப்பு என இன்னோரன்ன விடயங்களுடன் தொடர்பு உடையது. ஆனால் மங்கல நிகழ்வொன்றின் படப்பிடிப்பானது நடக்கும் நிகழ்வை நினைவுபடுத்துவதற்காகப் பதிவுசெய்யப்படும் ஒளிநாடா என்பதை இங்கே யாவரும் மறந்துவிடுகின்றனர்.

வீடியோப்படம் பிடிக்கின்றவர்களில் பெரும்பாலானோர் இக் கலையை முறைப்படி கற்றுப் புலமை பெற்றவர்கள் அல்ல. தம்மால் எடுக்கப்படும் படம் சிறப்பாக அமைய வேண்டும், அதனைத் திரைப்படம் போல் தொகுக்கவேண்டும், பார்ப்பவர்கள் தம்மைப் புகழவேண்டும், இதனால் வாடிக்கையாளர் பெருக வேண்டும், வருமானம் பெருக வேண்டும் என்னும் வியாபார நோக்கோடு பணமும் புகழும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர்களே பெரும் பாலும் உள்ளனர். இதன் காரணமாகப் படப்பிடிப்பாளர் மங்கல நிகழ்வுகளில் தன்னைமறந்து தான் படப்பிடிப்பாளர் மட்டுமன்றி நெறிப்படுத்துநர் மற்றும் செயற்பாடுகளுக்கும் பொறுப்பானவர் என எண்ணத் தொடங்கிவிடுவதால் அங்கே முதல் இடம்பெறும் அந்தணரையும், இரண்டாம் இடம்பெறும் நிகழ்வுக்குப் பொறுப்பானோரையும் மறந்துவிடுகிறார். இதன்காரணமாகவேதான் சமயச் சடங்கை நிகழ்த்த முடியவில்லை என்று அந்தணரும், கலாசார சீரழிவு என மற்றையோரும் குறை சொல்கிறார்கள்.

### காரணம் யார்?

இதற்கு ஒரேயடியாகப் படப்பிடிப்பாளர் மேல் பழிபோடவும் முடியாது. மேடைகளில் விழாக்கள் நடத்தும் போதும், பட்டமளிப்பு, பரிசளிப்பு, விளையாட்டுப் போட்டிகளின்போதும் எந்தவித இடருமின்றி உள்ளதை உள்ளபடி படப்பிடிப்பாளர் ஒளிப்பதிவு செய்கிறார்கள். அப்படியானால் திருமணம், பூப்புப்புனித நீராட்டு விழா போன்ற இடங்களில் மட்டும் ஏன் இந்த அவலம். அதற்குக் காரணம் மங்கல நிழ்வுக்குப் பொறுப்பானவர்கள்தான். தங்கள் மங்கல நிகழ்வுகளைச் சமயப் பண்பாட்டுடன் நடத்தவேண்டும் என்பதை விட, சிறப்பான ஒளிப்பதிவு செய்யப்படுவது தான் முக்கியம் எனக்கருதுபர்களே இதற்குக் காரணம்.

> "......மினக்கெட்டு சொக்கட்டான் பந்தல் போட்டது தான் மிச்சம். பந்தலை வடிவாக வீடியோ எடுக்கவில்லையே......"

அண்மையில் மங்கல விழா ஒன்றுக்கு ஒளிப்பதிவாளர் ஒருவர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தார். அவர் எடுத்த நாடாவைப் பின்னர் பார்வையிட்ட போது நிகழ்வை நடத்தியவரின் மனைவி சொன்னார்

"மினக்கட்டுச் சொக்கட்டான் பந்தல் போட்டதுதான் மிச்சம். பந்தலை வடிவா வீடியோ எடுக்கவில்லை" என்று ஆதங்கப்பட்டார். ஆகவே விரும்பியோ விரும்பாமலோ எம்மிடையே புகுந்துவிட்ட ஒளிப்பதிவுச் சடங்குகளையும், நாம் நமது சமயச் சடங்குகளுடன் இணைத்து செயற்படுத்துவதே பொருத்தமானதாகும்.

### திட்டமிடல் அவசியம்

மங்கல நிகழ்வொன்றின் ஏற்பாட்டாளர்கள் அந்நிகழ்வு எப்படி அமையவேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். சடங்கை நிறைவேற்றும் அந்தணருடன் முன்னதாகவே கலந்துரையாடி, தமது ஊர், குல வழக்கங்களை அவரிடம் கூறி, அவர் சமய நிகழ்வை எளிதாக முறைப்படி நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும். சடங்கை ஆரம்பம் முதல் முடிவு வரை, பொறுப்பாக நின்று செயற்படுத்த இருவர் அல்லது மூவரை பொறுப்பாக நியமிக்க வேண்டும். அவர்கள் யாவரது கருத்தையும் அனுசரித்து அன்பாகத், தாமே தலைமைதாங்கி நடத்தக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். ஒளிப்பதிவாளர்களுடன் முன்னதாகவே கதைத்துச் சமயச் சடங்கில் ஒளிப்பதிவு எப்படி அமைய வேண்டும்? அவர்களின் பங்களிப்பு என்ன? ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒதுக்கப்படவேண்டிய நேரம், ஒளிப்பதிவாளர் எப்படியான நிகழ்வுகளை எடுத்தால் போதுமானது, நிகழ்வுகள் எங்கெங்கு நடக்கும் என்பவற்றை அவர்களுக்கு எடுத்துச்சொல்லி தங்கள் ஆலோசனைப்படி செயற்படும்படி எடுத்துக் கூறி நடப்பித்தல் வேண்டும்.

### ஒளிப்பதிவாளர்களின் பங்கு

நிகழ்வொன்றை, ஒளிப்பதிவு செய்பவர்கள் சிறிதுசிந்திக்க வேண்டும். ஒரு திரைப்படமானது நடிகர் முதல் நெறிப்படுத்துபவர் வரை பலரது ஒத்துழைப்புடன் உருவாவது. ஆனால் ஒரு நிகழ்வின் வீடியோ ஒளிப்பதிவானது தனி ஒருவரின் கைவண்ணத்தில் அமைவது. ஆனால் படப்பிடிப்பாளரும், பார்ப்போரும் நிகழ்வின் பதிவைத் திரைப்படம் போல் எதிர்பார்க்கின்றனர். ஆதலால் படப்பிடிப்பாளர் முன் ஏற்பாட்டுடன் சிந்தித்துச் செயற்பட்டால் எமது பண்பாடு, கலாசாரம் கெடாமல் திரைப்படம்போல் நிகழ்வையும் பதிவு செய்யலாம்.

நிகழ்வொன்றை ஒளிப்பதிவு செய்வதற்குப் பொறுப்பேற்கும் ஒருவர், முன்னதாகவே நிகழ்வு நடக்கும் இடத்திற்குச் சென்று இடங்களைப் பார்வையிட்டு, நிகழ்வுபற்றி ஏற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடி, முக்கியமாக நீராட்டும் இடம், சாமியறை, அலங்கார அறை என்பவற்றைப் பார்வையிட்டு, கிழக்குத் திசை என்பவற்றைப் பார்த்து அதற்கமைய எங்கு நின்று படம் எடுத்தல் வேண்டும் என்பவற்றைத் தீமானித்து, அதில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமாயின் பண்பாடு கெடாமல் படப்பிடிப்பும் சிறப்பாக அமையக் கூடியவகையில் ஏற்பாட்டைச் செய்வது பாராட்டுக்குரியது. படம் பிடிக்கப்படவேண்டிய முக்கிய இடங்களை முன்னரே கண்டறிந்து ஆங்காங்கே உரிய மின் இணைப்புகளைச் செய்து வைத்தல். ஒன்றுக்கு மேற்பட்ட படப்பிடிப்புக் கருவிகளைக் கையாளுதல். உதாரணமாக மாப்பிள்ளையுடன் ஒருவர் படம் பிடித்துவர, பெண் வீட்டில் அலங்கார அறையில் பெண்ணை வேறொருவர் படம் பிடித்தால் காலவிரயத்தைத் தடுக்கலாம். அலங்கார அறையில், நீராடும் இடத்தில் பெண்ணைப் படம் எடுப்பதற்கு பெண் படப்பிடிப்பாளர்களையும் தமது குழுவில் சேர்த்துக்கொள்ளலாம். இதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். படங்களை பிடிக்கும்போது பலர் கூடி நிற்பதைத் தடுக்கும் பொருட்டு ஒளிபாய்ச்சியை (Flash Light) கமராவிலேயே பொருத்தி வைத்தல். படப்பிடிப்பாளருக்குத் தேவையான உபகரணங்களைத் தன்னுடன் வைத்திருக்கக் கூடியவாறான மேலங்கியை அணிதல். மணவறையை முன்னரே சரி பார்த்து சிவாச்சாரியாருடனும் நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடனும் கலந்தாலோசித்து அவர்களின் ஆலோசனையைப் பெறுவதுடன், தமது ஆலோசனைகளையும் வழங்கல். நிகழ்விற்கு ஏற்றாற்போல் படப் பிடிப்பாளரும் உடையணிந்து கொள்ளல் மிக முக்கியமாகப் பண்பாடு, மத நம்பிக்கை, கலை, கலாசாரத்தை பாதிக்கும். சகுனம் பிழையான நில், பொறு, பிடி போன்ற வார்த்தைகளை தவிர்த்தல் சமயக் கிரியையும் கலாசாரமுமே படப்பிடிப்பைவிட முக்கியமானவை என்பதை ஏற்றுக்கொள்ளுதல். வீட்டுக்கு வீடு அவரவர் கலாசாரத்திற்கேற்ப சடங்குகள் வேறுபடலாம். ஆதலால் நடப்பதை எடுக்கவேண்டுமே தவிர, தமக்கு தெரிந்ததைச் சொல்லி "அப்படிச் செய், இப்படிச் செய்" எனச் சடங்கு விடயங்களில் கட்டளை இடுவதை தவிர்த்தல். (வீடியோக்காரர் சொல்லி செய்விக்கவில்லை என்று யாரும் குறை சொல்லமாட்டார்கள்) இவை யாவும் வீடியோப் படப்பிடிப்பாளர்கள் கவனிக்க வேண்டியவையாகும்.

### அமங்கலம் வேண்டாம்

சடங்குகளின்போது அபசகுனச் செயற்பாடுகள் மிகவும் தவறானதே என்பதை உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். மங்கள நிகழ்விற்கான வீடியோ நாடாவை நிகழ்வு முடிந்த பின் ஓய்வாக இருக்கும்போது பார்வையிடுவார்கள். அதனை முதல்முறை பார்க்கும்போதுகூட ஒழுங்காகப் பாராது நிகழ்ச்சிகளை ஓட விட்டு பார்ப்பார்கள். அதுமட்டுமன்றி ஒருவர் தமது மங்கள நிகழ்வு வீடியோப் பிரதியை தமது வீட்டுக்கு வருபவர்களுக்குப் போட்டுக் காட்டுவார்கள். வந்திருப்போர் மிகுந்த சிரமத்துடனும் அலுப்புடனும் அதனைப் பார்த்து எப்போ முடியும் எனச் சிரமப்படுவதைப் பலரும் அவதானித்திருக்க முடியும். இளம் வட்டத்தினர் நிகழ்வின் பின் பூங்காவில் எடுக்கப்படும் "மிக்சிங்" மட்டும் விரும்பிப் பார்ப்பர்.

ஆனால் சில வருடங்களுக்கு முன் வீடியோப் பிரதிகள் வெளிநாடுகளில் உள்ள உறவினருக்கு அனுப்பப்படும்போது அங்குள்ளவர்கள் தமது உறவினரைப் பார்த்து மகிழ்ந்ததும் பலமுறை போட்டுப் பார்ப்பதும் உண்மைதான். ஆனால் இப்போ தினமும் பல வீடியோ நாடாக்கள் வெளிநாடுகளுக்குப் போவதால் அவர்கள் அது குறித்து அலட்டிக் கொள்வதில்லை என்பதையும் தற்போது கவனத்திற்கொள்ளுதல் நலமாகும்.

வீடியோப்படம் பற்றிக் குறிப்பிடும்போது நிழற்படம் பிடிப்போர் பற்றியும் இங்கு சிறிது குறிப்பிட வேண்டியுள்ளது. பல திருமணப் பதிவுகளில் மணமகன் ஒப்பமிட்டதும் மணமகள் ஒப்பமிடப் பேனையை எடுக்கும்போது பிலிம்றோல் மாற்ற வேண்டும் என்று சொல்லி நிகழ்வை இடைநிறுத்த நிர்ப்பந்திக்கப்படுவது உண்டு. நிழற்படப்பிடிப்பாளர்கள் நிகழ்வொன்றின் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். நிகழ்வு தொடங்கும்போது போதுமான அளவு படங்கள் எடுக்கக்கூடிய ஆயத்த நிலையில் "கமரா"வை வைத்திருத்தல் வேண்டும்.

வளர்ந்து வரும் நாகரிகத்தில் படப்பிடிப்புக் கலையை நன்கு கற்று நவீனத்துடன் இணைந்து எமது கலை, கலாசாரம், பண்பாடு கெடாமல் ஒளிப்பதிவுசெய்ய ஒத்துழைகக யாவரும் முன்வருதல் வேண்டும். ★

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



புவி வாழ்வு 05 - 07 - 1962

இறை வாழ்வு 15 - 02 - 2001

திருமதி
**சத்தியாதேவி சிவகுமார்**

திதி: 06-03-2002

*அம்மா என்னும் எம் உயிர்*
*அணைந்து ஆண்டு ஒன்று நிறைவு*
*எப்பிறப்பிற் காண்போம்*
*எம் இனிய தெய்வத்தை?*

*கொக்குவில் மேற்கு,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (1346)

கணவர், பிள்ளைகள், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், உறவினர்கள்.

உ
ஓம் சாயிராம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது 21 - 02 - 1953

உதிர்ந்தது 06 - 03 - 2000

**அமரர் இரத்தினம் சிறீகாந்தன்**

*(தொலைத் தொடர்பு பரிசோதகர்)*

*மனித வாழ்வை நிலையில்லாதது என எனக்குப் புரிய வைக்க மனித வடிவில் வந்த ஸ்ரீ ராமா! கிருஷ்ணா! கோவிந்தா! ஸ்ரீயை மறந்து ஹரியை நாடி நில்லு அம்மா! என்றா விட்டுச்சென்றீர்கள்! பகவானின் பாதக்கமலங்களில் சேரவும், ஆதமசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*அராலி தெற்கு,*
*ச.ம.வி.ஒழுங்கை,*
*அராலி.* (1304)

மனைவி
திருமதி சி.சிறீகாந்தன்.






**'கியூடெக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டு மக்களுக்கு 'செடேக்' நிறுவனத்தின் சட்டத்தரணிகளின் உதவியுடன் கடந்த நான்கு தினங்களாக இலவச சட்ட உதவியும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.**

**கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் சனசமூக நிலையத்தில் இந்த சேவை ஆரம்பமானது. இதன்போது பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவரிடம் இருந்து 'செடேக்' நிறுவன சட்டத்தரணி பிரியந்த கமஹேற விளக்கம் கேட்பதையும், அருகில் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் மற்றும் சட்டத்தரணிகளான ஏ.அன்ரனிப்பிள்ளை, எஸ்.ஜெயசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.**

**இலவச சட்ட ஆலோசனையைப் பெறவந்த மக்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஐ-6)**

## திருமலையில் 'பொங்கு தமிழ்' ஒத்திவைப்பு

திருகோணமலை,மார்ச்6

திருகோணமலையில் எதிர்வரும் 9ஆம்,10ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-3)

## மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,மார்ச்6

நாவற்குழி மகா வித்தியாலயம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் இப்பாடசாலையின் நிரந்தர மாணவர்கள் தமது பெயர் விவரங்களை இன்றுமுதல் எதிர்வரும் 13ஆம் திகதிவரை உரும்பிராயில் அல்லது நாவற்குழியில் பதியுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

## எரிகாயங்களுடன் இருவர் அனுமதி

எரிகாயங்களுக்கு இலக்கான இரு பெண்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை, நெடியகாட்டைச் சேர்ந்த பொன்னம்பலம் சுதந்திரதேவி (வயது 61) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, எரிந்து கொண்டிருந்த விறகை எடுத்துவந்த போது அது தவறி விழுந்து சேலையில் தீப்பற்றியதால் எரிகாயங்களுக்கிலக்கானார்.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சசீலன் ரசிதா (வயது 27) என்ற பெண் நேற்றுமுன்தினம் எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். மத்திய கல்லூரி, மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன் 10வயது, 12வயது பிரிவுகளுக்கான ஆண், பெண்களுக்கான கரம் போட்டியை நாளை வியாழக்கிழமை மாலை 3மணிமுதல் கல்லூரியில் நடத்தவுள்ளது. (ஐ-3)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியன தமது 50ஆவது ஆண்டு நிறைவுப் பொன்விழாவை முன்னிட்டு நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் விகவும் மானிப்பாய் ஆனந்தா வி.கவும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

★ ★ ★

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அருகிலுள்ள மைதானத்தில் அதிபர் அ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்வர். (க-72)

★ ★ ★

தெல்லிப்பழை தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

அதிபர் மு.சொர்ணலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணக்காளர் க.பொன்னுத்துரையும் சிறப்பு விருந்தினராக ஆசிரிய வளநிலைய முகாமையாளர் செ.சத்தியமூர்த்தியும் கலந்துகொள்வர். (ஐ-ரி)

★ ★ ★

மானிப்பாய் சென்ற ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மே.த.லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் நா.வேதநாயகனும் கௌரவ விருந்தினராக மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு. எவ்.பெனற மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (க-9)

## ஈச்சமோட்டை மைதானம் துப்புரவு

ஈச்சமோட்டை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் சீர்செய்யப்பட்டுவருகின்றது.

கடந்த இரண்டு வருட காலமாக பாவனையின்றி இருந்த இந்த விளையாட்டு மைதானத்தில் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (க-17)


### யாழ/புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்
### இல்ல மெய்வன்மைப் போட்டி - 2002

*இடம்:* புனித றோக்ஸ் விளையாட்டு மைதானம்
*நாள்:* நாளைமறுதினம் (08.03.2002) வெள்ளிக்கிழமை
*நேரம்:* காலை 9.30மணி
*தலைவர்:* திரு.தி.சத்தியபாலன் (அதிபர்)

*பிரதம விருந்தினர்:*
திரு.யோ.ரவீந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம், யாழ். வலயம்)
*சிறப்பு விருந்தினர்:*
அருட்திரு அ.கொ.கிறிஸ்தோப்பர்
(யாழ். மறைக்கோட்ட முதல்வர்)

(C/20964) - பாடசாலைச் சமூகம்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசிங்கம் யோகராணி

100/1, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பூநகரி 4ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் யோகராணி நேற்று (05.03.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கையிலாசபிள்ளை மற்றும் பரமேஸ்வரியின் மகளும், பாலசிங்கத்தின் (வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி) அன்பு மனைவியும், சாந்தரூபன், மோகனரூபன், ஜெகரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கம் (எழுதுநர், யா.ப.நோ.கூ.சங்கம்), பரமலிங்கம், சங்கரலிங்கம் (எழுதுநர், யாழ்.மாநகரசபை), யோகலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூநகரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*46/2,அரச வீதி,* கணேசலிங்கம், பரமலிங்கம்,
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (1377) சங்கரலிங்கம். (சகோதரர்கள்)

### செல்லப்பா கந்தையா

நவாலி கிழக்கைச் சேர்ந்த செல்லப்பா கந்தையா நேற்றுமுன்தினம் (04.03.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2002) வியாழக்கிழமை நவாலியிலுள்ள "கந்தகோட்டம்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00மணியளவில் நவாலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
*நவாலி கிழக்கு,* மனைவி,பிள்ளைகள்,
*மானிப்பாய்.* (1374) மருமக்கள்.

### திருமதி மீனாட்சிப்பிள்ளை சற்குணானந்தன்

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சிப்பிள்ளை சற்குணானந்தன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (05.03.2002) காலமானார்.

அன்னார் உடுவிலைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் அமரர் அ.சற்குணானந்தன் அவர்களின் பாசமிகு மனைவியும், பரமேஸ்வரன் (பொறியியலாளர், கொழும்பு), சிவயோகேஸ்வரி, துவாரகாதேவி, (முன்னாள் நூலகர், வட்டுக்கோட்டை பொதுநூலகம்), திருச்செல்வம் (ரூபா பல்பொருள் வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்), கைலாசநாதன் (அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), சரோஜினிதேவி, லோகநாயகி (ஆசிரியை, கொ/வத்தளை முஸ்லிம் மகளிர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமுதா, பஞ்சலிங்கம், சிவானந்தசோதி, நளாயினி, பவானி, இராஜரட்ணம், கணேந்திரன் ஆகியோரின் அன்புமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொல்புரம் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.03.2002) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாற்று மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தொல்புரம் கிழக்கு,* ச.திருச்செல்வம் (மகன்)
*சுழிபுரம்.* (1372) ச.கைலாசநாதன் (மகன்)

### அப்பாப்பிள்ளை சுப்பையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை சுப்பையா 28.02.2002 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், குமரேஸ்வரனின் அன்புத் தந்தையும், விஜயரூபினியின் அன்பு மாமனாரும், கயல்விழி, கயல்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.03.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (1373) சு.ஞானேஸ்வரி (மனைவி)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையின் அன்புத் தாயார்
**திருமதி அன்னம்மா சின்னத்துரை**
அவர்கள் 05.03.2002 காலமாகியதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
(1370) கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

## 2ஆவது ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை

தோற்றம் 30 • 05 • 1942



மறைவு 29 • 02 • 2000

### அமரர் வெக்டர் P.வேலாயுதம்

திதி: 08.03.2002

*இடம்:* உடுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திரர் தேவஸ்தான மண்டபம்.

அமரரின் அன்பு உள்ளங்கள் அனைவரையும் *நாளை மறுதினம் 08.03.2002 வெள்ளிக்கிழமை* நடைபெறவுள்ள பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*'வேலாயுத பவனம்',*
*உடுப்பிட்டி.* (1375) - குடும்பத்தினர்.


**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந்த், சௌந்தர்யா நடித்த
**தவசி** (ரீலஸ்)
தினசரி: 11.00, 2.30, 6.30 (பு.நே.) (C-20909)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ரம்பா, தேவயாணி நடித்த
**நினைத்தேன் வந்தாய்** (ரீல்ஸ்)
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)
காட்சிகள்: 11.00, 2.00 (புதிய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்
சேது புகழ் விக்ரம், காவேரி, மணிவண்ணன் நடித்த
இனிய பாடல்களுடன்
**காசி** (C/20908)
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு (3 காட்சிகள்)
10.30, 2.30, 5.00 (புதிய நேரம்)

# யுத்தநிறுத்தப் போர்வையில் புலிகள் பெரும் போருக்குத் தயாராகின்றனர்

## நாடாளுமன்றத்தில் அனுரா எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்6

யுத்தநிறுத்தம் செய்கிறோம் எனப் பாவனை பண்ணிக்கொண்டு புலிகள் பயங்கர யுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நம்பி அரசு ஏமாந்துவிடக்கூடாது. பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். புலிகளின் கோரிக்கைகளுக்கு நீங்கள் உடன்படாவிட்டால் கொழும்பிலும் புலிகள் தாக்குதல்களை நடத்துவார்கள்.

இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கா.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மீதான விவாதத்தை எதிரணியினரின் சார்பில் அவர் முடித்துவைத்து உரையாற்றினார்.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக என்ன நடக்கும் என்பதை உறுதியாக யாராலும் கூறமுடியாது. பிரச்சினை தீரும் அல்லது பாரிய அழிவு ஒன்று ஏற்படும் இது நிச்சயம்.

பிரிக்கப்படாத இலங்கைக்குள் தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சமமாகவும் சமாதானமாகவும் வாழும் நிலை ஏற்படவேண்டும் என்பதையே நாங்களும் விரும்புகின்றோம்.

ஆனால், பிரதமரும் புலிகளும் செய்துகொண்ட ஒப்பந்தம் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை சிரேஷ்ட அமைச்சர்களுக்கே அதன் விவரம் தெரியாது. பிரபாகரன் ஒப்பம் வைத்த பின்னரே அது ஜனாதிபதிக்கும் காட்டப்பட்டது.

நாட்டின் எல்லையைத் தீர்மானிக்கும் பொறுப்பு மூன்றாவது நாடு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் புலிகள் பேச்சுக்கு வருவோம் என்று ஓர் இடத்திலும் குறிப்பிடப்படவில்லை; அரசியல் தீர்வு தொடர்பாக ஏதும் கூறப்படவில்லை.

ஆனால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் புலிகள் நாட்டின் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக நடமாட முடியும். கொழும்பிலும் நுவரெலியாவிலும் புலிகள் கூட்டங்களை நடத்த இடமளித்தால் நிலைமை என்னவாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நீங்கள் தடைகளை நீக்கிவிட்டீர்கள். தினசரி வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இருந்து பல லொறிகள் கொழும்புக்கு வருகின்றன. எந்த விதமான சோதனைகளும் இல்லை. அவற்றில் என்ன கொண்டுவரப்படுகின்றது என்பதாவது தெரியுமா? கொழும்பில் வத்தளை, வெள்ளவத்தை போன்ற இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். அங்கே புலிகள் இப்போது தமக்குப் பாதுகாப்பான தளம் அமைக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?



புலிகள் மீதான தடை நீக்கப்படாமல் பேச்சுக்கே இடமில்லை என்கிறார் அன்ரன் பாலசிங்கம். ஈழப் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்கிறார் தமிழ்ச் செல்வன். அரசு புலிகளை நம்பினாலும் புலிகள் அரசை நம்பவில்லை.

புலிகள் இப்போது தாராளமாக ஆயுதங்களை சேகரிக்கின்றனர். பத்து வயது முதல் 18 வயது வரை இளைஞர்களைக் கட்டாயமாகச் சேர்த்து இராணுவப் பயிற்சி அளிக்கின்றனர். முஸ்லிம் வர்த்தகர்களைக் கடத்தி கப்பம் வசூலிக்கின்றனர்.

சமாதானம் என்ற பேரில் அவர்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்கின்றனர். சமாதானப் பேச்சுகளில் புலிகள் கேட்டதைக் கொடுக்கா விட்டால் முதலாவது அடி கொழும்பில் தான் விழும் - என்றார் அநுரா.(ஐ)

# பாதை திறப்பது குறித்து கொழும்பில் ஆராய்வு!

கொழும்பு,மார்ச்6

யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப் பாதையைத் திறப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருக்கேதீஸ்வரத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும சிவராத்திரி நிகழ்வுகளில் குடாநாட்டு மககளும் பங்குபற்ற வசதியாக தரை வழிப் பாதையைத் திறக்கவேண்டும் என்று இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதமரிடம் கோரியிருந்தார்.

இதைத் தொடர்ந்து இது விடயமாக பிரதமர், பாதுகாப்பு அமைச்சருடன் நேற்றுக் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் அமைச்சர் மகேஸ்வரனும் பங்குபற்றினார்.

புரிந்துணர்வு உடன்பாட்டின்படி தரைவழிப் பாதையைத் திறப்பது தொடர்பாக அப்போது ஆராயப்பட்டது.

எதிர்வரும் 12ஆம் திகதி இடம் பெறும் சிவராத்திரி விழாவுக்காக யாழ்.மக்கள் திருக்கேதீஸ்வரம் செல்ல எழுதுமட்டுவாழ் ஊடாகக் கண்டி வீதியைத் திறக்க சாத்தியம் இல்லை என்று பாதுகாப்புத் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாகர்கோவில் ஊடாக பாதை ஒன்றை முதலில் திறப்பதற்கான சாத்தியம் குறித்தும் நேற்று ஆராயப்பட்டுள்ளது. எனினும் இந்த விவகாரம் தொடர்பான இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(ஐ-3)

## கண்காணிப்பாளர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் வே.பிரபாகரனை மரியாதையின் நிமித்தம் இன்றைய தினமே சந்திப்பார்கள் என்று தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்று கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் இந்த விடயம் குறித்தும் தகவல் வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த 18 கண்காணிப்பாளர்கள் இந்தப் பணியில் ஈடுபடுவார்கள். அவர்களில் மூவர் ஏற்கனவே இலங்கைக்கு வந்துவிட்டனர். ஆறுபேர் இன்றும் மற்றும் ஆறு பேர் ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு வரவுள்ளனர். ஏனைய மூன்று கண்காணிப்பாளர்களும் காலக்கிரமத்தில் வந்து சேருவர்.

சமாதான முயற்சிகளின் போது முன்னர் விட்ட தவறுகளை மீண்டும் நாம் செய்ய விரும்பவில்லை. 1995 ஆம் ஆண்டு சமாதான பேச்சுக்களுக்காக நாம் நாள் குறித்து பேசினோம். அப்போது புலிகள் இயக்கத்தினர் பல விடயங்களை முன்வைத்தனர். அவற்றுக்குத் தீர்வு காணப்படவில்லை. இதனால் பின்னடைவுகள் ஏற்பட்டன. மீண்டும் இத்தகைய பின்னடைவுகள் ஏற்பட இடமளிக்கமாட்டோம்.

இன்னும் இரண்டரை மாதங்களில சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகும் வாய்ப்புகள் உள்ளன. அதற்கு முன் பேச்சுகளுக்கு உகந்த புறநிலை உருவாக்கப்படுவது அவசியம். அதற்காகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதைச் சரியாக - முறையாக - நடைமுறைப் படுத்துவதற்கு நோர்வே மத்தியஸ்தர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

போர்நிறுத்த உடன்பாடு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எந்தவொரு பாதகத்தையும் ஏற்படுத்தமாட்டாது. முப்படைத் தளபதிகளுடன் பேசிய போதும் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதி சுமத்திய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை - என்றும் பீரிஸ் தெரிவித்தார். (ஐ-3-6-7-ரி)

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்து அவற்றைச் சமர்ப்பிக்க எதிர்வரும் 14 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கியுள்ளது. (ஐ-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் அடைபட்டு அல்லலுறும் நிலைமையும் ஏற்பட்டது.

புதிய அரசு பதவியேற்று, நல்லெண்ண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது வவுனியாவில் வசிப்போருக்கு நிரந்தர 'பாஸ்' அனுமதியும், தென்னிலங்கையில் இருந்து வருவோருக்கு 14 நாள் தங்குமிட அனுமதியும், வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து வருவோருக்கு 10 நாள்கள் தங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

தற்போது இந்த வதிவிட அனுமதி முறை முற்றாக நீக்கப்பட்டிருக்கிறது.

இதனால் வவுனியாவில் இருந்து வெளியிடங்களுக்கும், ஏனைய பிரதேசங்களில் இருந்து வவுனியாவுக்கும் மக்கள் சுதந்திரமாகச் சென்று வர, வாய்ப்பேற்பட்டிருக்கிறது.

(ஐ-16-4)

### சுயநிர்ணய உரிமை, தாயக தனித்துவத்தை வலியுறுத்தி

# ஜெனீவாவில் இம்மாதம் 25 ஆம் திகதி ஈழத் தமிழர்கள் மாபெரும் பேரணி!

ஜெனீவா,மார்ச்6

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தேசிய தனித்துவம் என்பவற்றை வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி ஜெனீவாவில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

ஜெனீவாவின் முக்கிய நகரமொன்றில் இருந்து ஆரம்பிக்கும் இந்தப் பேரணி ஜெனவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பிய தலைமை அலுவலகம் வரை நடைபெறும்.

பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், டென்மார்க், சுவீடன், நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் இந்தப் பேரணியில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

★தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகள் -

★தமிழீழ மக்களின் தேசியம், தாயகத் தனித்துவம், சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப்படவேண்டும் -

★விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசும் ஏனைய நாடுகளும் நீக்கவேண்டும் -

★தமிழீழ மக்களின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை போன்றவை முற்றாக அகற்றப்படவேண்டும் -

★இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவது முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-7)

### கழுத்துறைச் சிறைச்சாலையில்

# உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் இருவர் மயக்கம்

கொழும்பு,மார்ச்6

களுத்துறைச் சிறையில் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ள 5 தமிழ் அரசியல் கைதிகளில் இருவர் நேற்று மயக்கமடைந்தனர்.

தம்மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 5 கைதிகளில் இருவரே நேற்று மயக்கமடைந்தனர்.

இவர்கள் கடந்த மூன்றரை வருட காலத்துக்கும் மேலாகக் களுத்துறைச் சிறையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கைதிகளுடன் மேலும் பல கைதிகள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6-ரி)


இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
பொதுமுகாமையாளருடனான சந்திப்பு

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர், கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களையும் *இன்று (06.03.2002) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்.காரியாலயத்தில்* சந்திக்கவுள்ளார்.

சகல ஊழியர்களும் தவறாது இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பொறுப்பதிகாரி,
*யாழ்.காரியாலயம்,*
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.

*65, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-20962)



NEW SCIENCE HALL
JAFFNA.

2003 A/L இரசாயனவியல்

வினாவிடை வகுப்பு
25வருட (1979-2001வரை) கடந்த கால வினாவிடைகள்
அலகு ரீதியாக அடிப்படை இரசாயனத்தில் இருந்து மீட்கப்படும்.
*ஆசிரியர்: திரு.க.சிவத்திரன்* B.Sc.(Hons)
ஆரம்பம்: 07.03.2002 வியாழன் காலை 6.40
செவ். - வியாழன் 6.40 - 7.50வரை.
(1368)



JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA
J.T.I
புதிய பிரிவு ஆரம்பம்
09.03.2002
Diploma in MS Office
Certificate Course
Visual Basic
Visual FoxPro
Corel Draw
Auto Cad
Ms Excel
Ms Access
J.T.I
No.07, Palaly Road, Jaffna.



எமது புதிய வீடியோ CD வெளியீடு
✪ மாங்கல்யம்
ஒரிஜினல் CD
✪ ரோஜாக் கூட்டம்
பிரதிகளை உடன் பெறலாம்.
அஸ்டி எலக்ரோனிக்ஸ் யாழ்ப்பாணம்.
(C/20966)



நிப்போன் இன்வெட்டர்

தொடர்ந்து 3மணித்தியாலம் 7ரியூப் வல்புகள் ஒளி தரக்கூடிய நிப்போன் இன்வெட்டர் மற்றும் பலவித வண்ணங்களில் ரெலிபோன் வகைகள் (Sanyo CLT85), 6W, 12W சாச்சர் லயிற் பற்றி வகைகள், வீடியோ கெசற்ர ர் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

செல்வம் ஸ்ரோர்ஸ்
330,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(1376)



சுனில் ஆட்ஸ்
305, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

26.02.2002வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06.03.2002 அன்று படச்சுருள்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படும்.

✪ எமது "அக்மி லாப்" (Acme Lab) வாடிக்கையாளர்களுக்கு 4R பிரதி ஒவ்வொன்றும் 16/- படி வழங்கப்படும்.

Note:
(1) வீடியோ கசட்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படும்.
(2) புதிய, பழைய பாடல்களை CDஇல் இருந்து CDஇற்கு Digital Filter முறையில் மிகவும் தரமாகப் பதிவு செய்திட 250/- மட்டுமே.
(C/20965)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.